24-5

ஓம் தத் சத்

பரப் பிரஹ்மணே நம:

# திருப் பூ வணம், வேதாந்த மடம்,

# காசிகா நந்த விஜயம்.

இது

சென்னை, தமிழ்ப் புலவர்


*ம. ராஜ கோபால் பிள்ளை அவர்கள்*

1915-ஞூ வசந வடிவ மாக் இயற்றியது.

அகம் பிரஹ்மாஸ்மி.

[illegible stamp]
4794
வி: 3324

அயம் ஆத்மா ப்ரஹ்மம்.



ப்ரஜ்ஞானம் ப்ரஹ்மம்.

தத் த்வ மசி.

இது

திருப் பூ வணம், வேதாந்த மடத்தாரால்,

மதுரை, மீந லோசநி பிரசில் பதிப்பிக்கப்பட்டது.

1925

இதன் விலை] [நயா பைசா 25

24-5

ஓம்.

# திருப் பூவண மடம், ஸ்ரீ காசிகாநந்த விஜயம்.

## சொரூப ஸ்துதி.

வான்முதல நின்றியங்கும் வடிவாவான் யாவனவன்
தான்முதலென் றுரைத்திடினுந் தனியனென்பான் யாவணவன்
நான்முதலென் றுணர்பவர்க்கு நலனருள்வான் யாவனவன்
தேன்முரலு மலர்ப்பதநஞ் சிரமணிந்து திரமுறுவாம்.

## கொற்ற வா ளீசர் துதி.

கற்றவா லறிஞ ருள்ளக் கமலம்வீற் றிருந்தண் டாண்ட
முற்றவா ளறிவா னந்த முதல்வன்முத் தொழிலுங் காண்போன்
வெற்றவா னவர்சூழ் வந்நி வியன்வனங் கோயில் கொண்ட
கொற்றவா ளீசர் பொற்றாள் குறித்திட ரறுத்து வாழ்வாம்.

## திரு நெல்லை நாயகி துதி.

இல்லை நாடினீ டெனநிவந் தெண்ணிலா வுயிரிங்
கல்லை நாடுத லறப்புரந் தருள்செய்வா னன்பிற்
றொல்லை நான்மறை துதிசெயச் சாலிவா டியில்வாழ்
நெல்லை நாயகி நீண்மல ரடியிணை நினைவாம்.

## வந்நி விநாயகர் துதி.

சென்னிவினு யிறுகோடி திரண்டாங்கு முடியினர்கொள் செயற்கும் யானே, மன்னிவினா டியின்முடிக்க வலனெனநால் வாய் வடிவாய் வணங்க வானோர், உன்னிவினா சமிலாம லொளிர்வளஞ் சேர் சமிநீழ லுற்று வாழும், வந்நிவினா யகர்முருகு வழியுநறு மலரடிகள் வாழ்த்தி யுய்வாம்.

## ஸ்ரீ சுப்பிர மணியர் துதி.

சிறைவைத்து மலரவனைத் திண்பொருளைச் சடைமுடியிற்
பிறைவைத்த பெம்மாற்குப் பிறங்கவளித் தெமையாள
நறைவைத்த மலர்ப்பொழில்சூழ் நல்வந்நி வநமேய
கறைவைத்த வேலேந்துங் கடவுண்மல ரடிநினைவாம்.

## ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாந தேசிகர் துதி.

வித்தி டாமல் விளைய வல்ல மேன்மை யுற்று விண்ணவர்- மெச்சு மாறு கோயி லூரெ னச்சி றந்த கழனியில், இத்த ராத லங்க ளிக்க வெய்தி யுண்மை யோர்ந்துநின்- றேக மான பிரம மேயிவ் வடிவெ னத்து தித்திடச், சித்த மேவு புராண னாகி நல்வே தாந்த சிரவணஞ்- செய்த நேக ரைச்சை தந்ய மாக வைத்த தூயனும், முத்தி ராம லிங்க ஞாந தேசி கன்ம லர்க்கழன்- முடிய ணிந்து பிணியொ ழிந்து சீவந் முத்த ராகுவாம்.

## ஸ்ரீ அருணாசல ஞாந தேசிகர் துதி.

போருணா னுங்குலவப் பிறங்குதுற வாசாரம் பேணிக் காமச்
சோருணா டுவதொத்துச் சுவாநுபவத் திருந்துசிவ சொரூப மாகி
ஆருணா முயப்புரிவா ரெனவடுத்தார் தமையாண்டிங் கன்பின் மேய
சீருணா சலஞாந தேசிகன்றன் றிருவடிகள் சிந்தித் துய்வாம்.

## ஸ்ரீ சிதம்பர ஞாந தேசிகர் துதி.

வெய்யசந நக்கடற்குப் புணையாய துறவுக்கோர் வியன்றுப் பாகி, வையமிசை யுதித்தெவையுந் தன்மயமாக் கண்டொழுகி வந்த டைந்தார்க், குய்யுமுபா யம்பணித்திங் குயர்மோந நிலைமேய வுதார சீலன், செய்யசிதம் பரஞாந தேசிகன்றன் றிருவடிகள் சிரமேற் றுய்வாம்.

## ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிகர் துதி.

அலங்கலர வெனவகநி யமைப்பறியா தலமருவோர்க் கருள் வான் போந்து, துலங்கலுறு துறவொழுக்கச் சீர்காட்டிச் சுகநாட் டத் துணையாய் நின்று, இலங்குசிவா காரமதா யிருந்துலக மேத் தெடுப்ப வெனையாட் கொண்ட, கலங்கலிலா வீரசே கரஞாந தேசிகர்பொற் கழல்கள் போற்றி.

24-5

உ

சிவமயம்.

# ஸ்ரீ காசிகா நந்த விஜயம்.

## திருப் பூவண மடம்,

## (ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய சுவாமிகள் சரித்திரம்.)

சார்பு ணர்ந்துசார் பறச்சகஞ் சார்ந்துதண் கருணை
நார்பு ணர்ந்தநற் கோவிலூர்க் காசிகா நந்தப்
பேர்பு ணர்ந்தவெம் பெருந்தகை வளனெலாம் பேச
நேர்பு ணர்த்தமா முகத்தொரு நிமலனை நினைவாம்.

## 1. தேவி கோட்டையின் சிறப்பு.

"போகபூ மியினிற் போக தநுவினுற் பொருந்த லாகா, தேகமா மின்ப சித்தி யியம்பிடிற் கரும பூமி, யாகமா னதுகொண் டன்றி யாதலான் ஞாலத் தெய்தி, யோகமா நெறியி னின்றோ ருண்மைசா தித்துக் கொள்வார்" என்ற வாறு, நித்தியாநித்திய விவேகம் புரிந்து, நிலே பே ருன இன்ப சித்தியை அடைதற் குரிய தோற்றம் மநிதத் தோற்ற மொன்றே யாம். ஏனைய தோற்றங்கள் யாவும் பலாநுசாரமாக வருவன வாம். இத் துணை யரிதிற் சித்திப்ப தாகிய இச் சநநத்தைப் பலர் கருவிலே திரு விலாதா ராய், "கரு விருத்தக் குழி நீத்தபின் காமக் கடுங்குழி வீழ்ந், தொருவிருத்தம் புக்குழல" வைக்கின்றனர். இவ் வருஞ் சந்மஞ் கிடைப்பதே துர் லபம். அதினும், இடையூறு பலவற்றிற்குந் தப்பித் தேறுவது மிகவுந் துர்லபம். ஒரு நற் குலத்தில் இச் சந்மம் எடுப்பது இன்னுந்

துர்லபம். நற் குலத்திற் பிறந்தும் நல்லவர் நேசமும், தெய்வ விசுவாசமும் எய்துவது யாவற்றினும் துர்லபம். இப் பேறு நேர்ந் துழியும், கல்வி கேள்விகளிற் சிறந்து, சுய மத ஸ்தாபக நோக்கிற் பொலிவது மகா துர்லபம். இத்யாதி லாபங்களை அடைந்து நற் கதி பெறுதற்கே இப் பிறவியை ஒரு புண்ணிய பூமியிற் கொள்ளுதல் விசேஷ மென்பர். நில நலத்தால் மக்க ளுறும் பலனும் பல வென் பது கண்கூடு. ஆகவே, பிரமசரிய நிலையில் குரு குல வாசஞ் செய்து வந்த போதே வைராக்கிய சீலராய்த் துறவு பூண் டருளிய நமது சுவாமிகளது அவதார ஸ்தல மான தேவி கோட்டையின் வைபவத்தை முன்னர்க் கூற வேண்டுவது அவசிய மெனத் தோன்றி யமையின், அது பற்றிச் சிறிது பேச லுற்றேன். தீர்த்த விசே டமும், மூர்த்தி விசேடமுங் கொண் டுள்ள க்ஷேத்திரத்திற் ஜநிக்கப் பெற்றூர்க்குச் சற் குரு கடாக்ஷம் விரைவி லெய்தும் என்பது ஆன்றோரின் அநுபவ மொழி யாம்.

மக்கட்குக் குறை வற்ற விளைவுப் பொருள்களை அள விறந்த தாக அளிக்க வல்லதும், தரும நோக் குடையார்க் குறைவிட மானதும், தாழ் விறந்த தாவந்தர் தழைக்க லுற்றதும், இக பர சௌகரியங்கட் கின்றியமையாத புண்ணிய தீர்த்தங்களையும், முழு முதற் கடவு ளாகிய சிவ பெருமானது திவ்யாலயங்களையும், விஷ்ணு ஆலயங்களையும் கொண்டது மான திரு க்ஷேத்திரத்தைப் பல காலும் பேசுமவரே பாக்கியவான்கள். புலமை வாய்ந்த நிலைமையரு மன்றோ இன்ன ஸ்தலங்களை யேத்திப் பாடு மாறு பெரியார் பணித்திருக் கின்றனர். "பொடிகொள் மேனியெம் புண்ணி யன்புக லூரைப் பாடுமின் புலவீர்காள்" என வருவது வேத வசந மல்லவா? இவ் வாறு பேசாதவரின் புலமை புலமையே யாம். "அடையா நெடுங் கதவு மஞ்ச லென்ற சொல்லு முடைய" இத் தன்மையான தலங் களின் மாகாத்மியத்தை வர்ணிக்க யான் அருக னல்ல னாயினும், அவை கொண் டுள்ள சிறப்பைச் சிறிது கவனிக்கும் போது, சிந்தை யவற்றின் வய மாய், "நற் றவஞ் செய்வார்க் கிடம், தவஞ் செய்

வார்க்கு மஃதிடம், நற் பொருள் செய்வார்க் கிடம், பொருள் செய் வார்க்கு மஃதிடம்" என் றிவ் வண்ணங் கொண்டாட நேரிடு கின்றது.

கவீச்சுரர் பரவுங் கனம் பெறு வளனும், புவீச்சுர ரறம் வழாப் பொரு வறு முறைமையும், பொருந்தப் பெற்று, செங் கமலத் திரும கட்கும், வெண் கமலத் தொரு மகட்கும் தாயக மாய், "வெம்மை யால்விளை வஃகினும் வேந்தர்கோல் கோடிச், செம்மை மாறினும் வறுமைநோய் சிதைப்பினும் சிவன்பாற், பொய்ம்மை மாறிய பத்தி யும் பொலிவுங்குன் றுவாய்த், தம்மை மாறியுந்" தருமம் புரிய வல்ல பாண்டித் திரு நாடாகிய பாவையர்க் கரசியின் திரு முகத் திலகத்தை யொத்து விளங்குவது தேவி கோட்டை யென்னுந் திருத் தல மாம்.

இது, "வையம் புகழ் திரு மெய்யத்தை வடபாலும், "வண்ண மாமலர் தூவிக் கைதொழ, வெண்ணுவா ரிடரேக"ச் செய்ய வல்ல திரு வாடானையைத் தென்பாலும், "இசை விளங்கு மெழில் சூழ்ந் தியல்பாகத், திசை விளங்கு பொழில் சூழ் திருப் புத்தூ ரையும், "புண்ணி யம்புரி பூமிபா ரதில்வரு போக, நண்ணி யின்புறு பூமிவா ரூடென்ப நாளும், புண்ணி யம்புரி பூமியு மதில்வரு போக, நண்ணி யின்புறு பூமியும்" தானே யாகிய மதுரை யம்பதியை மேற் பாலும், கோளுடைப் பொறியினற் கேளுடையவர்கள் சூழ் ஆளுடை யார் கோயிலைக் கீழ்ப் பாலும், எல்லையாகக் கொண்டு நடு நாயக மாய் நின்று, உலகை வாழ்விப்ப தாம். "வெற்ற வின்பம் விளைவிப்பான் விண்ணுவந்து வீழ்ந்தென, மற்றைநாடு வட்டமாக வைகும்" இந்த க்ஷேத்திரத்தின் மகிமையை, "இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கு நெற்றி யினத்துத்தி யணிபணமா யிரங்க ளார்ந்த, அரவரசப் பெருஞ்சோதி" யாகிய அநந்தனாலும் அள விட வியலா தென்ப. அளகா புரியிற் சொல் லளவில் நின் றுள்ள "சங்க நிதி பதும நிதி" என்னு மிரண்டும் இப் பதிக்கண் மேவித் தஞ் செய லளவைக் காண்பிக்கின் றனவோ என்று கண்டோர் அதிசயிக்கும்படி, ஆங்

குள்ள தநவந்தரிடம் அவை பல் வகை யறத்தும், நித்திய நைமித்திக மாகக் கடவுளர் பொருட்டுச் செய்யும் விழ வணித் திறத்தும் விளையாட லுற்றன. "குபேரன் பட்டிநத்தும் விறகுத் தலைய னுண்டு" என்னும் பழ மொழி இங்கு இழி மொழி யாம்படி வறிய ரைத் தேவி கோட்டையிற் காணக் கூட வில்லை. அபலைக ளான பெண்மக்க ளிடத்தும் நற் குண நற் செய்கை குடிகொண் டிருத் தலின், "பெருந்த டங்கட்பி றைநுத லார்க்கெலாம், பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால், வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும், விருந்து மன்றிவி ளைவன யாவையே" என்னும் பொன் னுரை இத் தலத் தின்னுரை யாயிற்று. இச் சிறப்பால் இப் பதிக் கண், "வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி, மிச்சின் மிசைவான் புலம்" என்ற வாறு, தாநிய முதலிய விளை பொருள்கள் ஏராள மாக விளைந்து வர லாயின. அன்றியும், ஆண் பெண் பாலா ரிருவரும் தாந் தாங் கைக்கொண் டுள்ள நிலைக் குரிய தருமத்தி னின்றும் வழாது நடந்து வருதலாலும், சிவ பக்தி, அடியார் பக்தி யாகியவற்றாலும், தளர் வற்றிருத்தலாலும், "விச்ச தின்றிலே விளைவு செய்குவாய்" என்னும் மணி வாசகப் பெருமான் வாக்கும் இங்குப் பலித மாயிற்று. வா னளாவிய மாட மாளிகைகளாலும், கூட கோபுரங்களாலும், மலர்ப் பொய்கைகளாலும், அடர்ந்த சோலைகளாலும், அள வற்ற சாலைகளாலும், அந்தண ராதியோர் வீதிகளாலும், ஓம வேள்வியாலும், உயர் தரக் கேள்வியாலும், ஆடல் களாலும், பாடல்களாலும், மழை வளங் குன்றாப் பெருமையாலும், விருக்ஷ மிருக பட்சி சாலங்களின் காட்சியாலும், யா தொரு தாழ்ச்சியு மின்றித் தனக்குத் தானே நிகராய்த் திசை யெட்டினும் இசை நிரப்பிக் கொண்டு வர லாகின்றது இத் தேவி கோட்டை.

## 2. தேவி கோட்டையில், சுவாமிகளின் பெற்ரோரது சிறப்பு.

அளகா புரியை எல்லா வழகினும் ஒரு வாறு தனக்கு ஈடாகப் பெற் றுயர்ந் துள்ள இத் தேவி கோட்டை யென்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில், "தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார், தோன்றலிற் ரோன்ருமை நன்று" என்ற வாறு புகழொடு தோன்றி மகிழ்வொடுஞ் சிறந்து வந்தார் ஒரு தந வைசியர். இவர் மாற் றூர் கோவில் — மண லூர் வகுப்பைச் சேர்ந்தவர். இவரது திரு நாமம் பெரி யண்ணன் செட்டியார் என்பர். இவரிடத்து அன்பு, அருள், பொறை, புநிதம் முதலிய சுகுணங்கள் இயற்கையாகவே மிகுந் திருந்தமையின், தாம் பெற் றுள்ள செல்வத்தை நல் வழியில் விர்த்தி செய்தும், செலவிட்டும் வந்தனர். ஒரு நாள் இவர் சிவ தியாநத் திருந்த போது, "ஈசனை யிருத்துறும் இதயத் தோர்பொருள், ஆசை யை யிருத்துத லந்த ணளர்தாம், வாசமுற் றிடுமொரு மனையிற் புன் ரெழில், நீசனை யிருத்துதல் நிகர்க்கும்" என்ற எண்ணம் இவரது நெஞ்சில் வே ரூன்றவே, "புகன்றிடு நன்மை தீமை பொருந்தலூழ் வினையா மீசன், சகந்தனி லுயிர்கட் கெல்லாந் தானுயிர்க் குயிராய் நின்றும், அகந்தைமெய்ஞ் ஞாநங் கல்வி யழித்தமைத் திடுவ னல்லாற், பகர்ந்திடு புருட ராலே நினைத்தவை பலித்தி டாவால்" என் றன்ரே நூல்கள் உத்கோஷிக்கின்றன. இனி நாம் சிவ புண்ணியத்திற் றலையிட்டு, நமது செல்வத்தைக் "கைப்பொருள் பெற்ற ஞான்றே கடவுளா லயத்திற் கீந்தும், மெய்ப்படு புராண நூல்கள் விதிமுறை கேட்டுவந்தும், வைப்பென விரப்போர்க் கீந்தும் வருபவ ருளரேல் கூற்ற, மொய்ப்படு தண்ட நீங்கி முன்னவ னின்பத் தாழ்வார்" என்ற வாறு சிவார்ப்பண மாகவே சத் விஷயத்தில் செலவிட்டு ஆத்மார்த்த மான உறுதியைத் தேடிக் கொள்ளுதல் வேண்டும்" என்று நிச்சயித்து, அவ் வாறே ஒழுக லாயினர். அக் காலத் திவர்க்கு, "மகப் பெறு மாநிடர்கள் வாநவர்தம் மூர்க்குப் புகப் பெறுர்" என்கிற நினைவும் நடையாடி வந்தது. சிவாநுக்கிரகத்தால்

சில நாளில் அறி வறிந்த ஆண்மக வொன்றை இவர் ஸ்வீகாரஞ் செய்து, செய்வன செய்து சிவத்திற் கலந்தனர். இவ் வாறு பெரி யண்ணன் செட்டியாருக்குச் சிவ பெருமானது அருட் பிரசா தத்தால், ஸ்வீகார மாகக் கிடைத்த பிள்ளைக்கு, இராம சுவாமி செட்டியார் என்னும் திருப் பெயர் இடப்பட்டது. இவரும் தக்க வயதில் உபநயநாதி கிரியைகள் முற்றும் குறை வறப் பெற்றவராய் கற்க வேண்டுங் கலைக ளனைத்தையும் அதிகரித்து, குலாசாரப்படி கிருகாச்சிரமத்தைக் கைக்கொள்ள லாயினர். பூர்வ வினையின் புண்ணிய பலத்தால் உமை யாம்பிகையார் என்னும் உத்தம குணங் களும், பிற நலங்களும், ஒருங்கே யமையப் பெற்ற கற்பரசியா மொருவ ரிவர்க்கு வாழ்க்கைத் துணைவிய ராக நேர லாயினர். ஈசுவர பக்தியோடு இராம சுவாமி செட்டியார் இல் லறத்தினின் ரொழுகும் ஆற்றலைப் பெற்று விளங்கினர்.

இல் வாழ்வார் அநுஷ்டிக்க வேண்டிய தருமத்தைப் பிழையாது மேற்கொள்வா ராயினர். சற் குரு சந்நிதாநத் திருந்து கற்றல் விரத மோம்பல் என்பவற்றைக் கவனிக்க வல்ல பிரமசரிய நிலையி னர்க்கும், வீட்டை விட்டுக் காட்டை நண்ணிப் பன்னியர் பணி செய்யத் தவம் புரிதலைக் கைப்பற்றிய வாநப் பிரஸ்த நிலையி னர்க்கும், அறத் துறந்து யோகத் தொழுக வல்ல சந்நியாச நிலை யினர்க்கும், ஆதா வற்றவர்க்கும், மிடியினர்க்கும், காலஞ் சென்றூர்க் கும், அவ ரவர்க் குறுதி தரும் விஷயத்தில் இயற்றற்பாலன வியற்று தற்கும், தென் றிசையாளர் கடவுளர் விருந்தினர் சுற்றத்தின ரென்னும் இவர்க் காவனவற்றை நடத்துதற்கும் உரியவள் இல்லாளே யாதலின், அந் நிலையிற் புக்க இவரும், அக் காரியங்கட் காவசிய மான பொருளை யீட்டும் வழி யறிந் தீட்டி யிட் டுண்பான் விழைவு மூண்டனர். இவ் விழைவு நடை பெறுங் கால், வருவன வாய பண்பிற்கும், பயனுக்கும் ஹேதுவா யுள்ள அன்பையும், அறத்தையும் வளர்க்கத் தொடங்கினர். இவ் விதம் இல் வாழ்பவன் இந் நில வுலகத்தானே யாயினும், அவன் மே லுலகத்தாருள் ஒருவனுகவே

மதிப்புறுவ னல்லவா? இம் மேன்மையிற் றலையிட்ட இராம சுவாமி செட்டியார் தாம் வளர்க்கத் தொடங்கிய அன்பு அறம் என்பவற்றுள் முன்னதற் குரியவர், அவரது மனைவியா ராதலின், அவ் வம்மையார் இவருடன் மந தொத்து நடந்து வந்தமையால், இவரது எண்ணம் பயன் பெற்று உயர் வளித்தது. அவ் வுத்தமியாரின் குணாதிசயங் களைச் சிறிது கூறுவோம்.

"எப்பணியா லின்புறுவர் காதலராக் காதலரை,
அப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி—ஒப்ப,
மநங்குழையும் வண்ண மகிழ்விப்ப தன்றோ,
கனங்குழையார் தங்கள்க டன்"

என்றபடி ஒழுக வல்ல உத்தமியரை யுலகம் புகழாது விடுவ துண்டோ?

"காண்டகைய தங்கணவ ரைக்கடவு ளார்போல்,
வேண்டலுறு கற்பினர்த மெய்யுரையி னிற்கும்,
ஈண்டையுள தெய்வதமு மாமுகிலு மென்றால்,
ஆண்டகைமை யோர்களும வர்க்குநிக ரன்றே"

என்பது பொய்யா? நிற்க, இந் நிலை வாய்ந்தா ரெவர்க்கும் வாய்த் துள்ளா ரெல்லோரும் பெண்டி ரெனப்படுவரோ? "கல்லெல் லாம் மாணிக்கக் கல்லாமா?" "படைப்பதூஉ மக்கட் பெறுவதூஉம் பெண்பால் முடிப்பதூஉ மெல்லாருஞ் செய்வர்." இவ் வாறு எல்லா மகளிருஞ் செய்து வருதலை நாம் இன்றும் கண்டு வருகின்றோம். இச் செயல் இவர்க ளிடத்து மட்டோ உண்டு; ஏனைய ஜீவ ராசிகள் எல்லாவற்றி னிடத்து மிருப்பதால், இவர்க் கெய்தும் பெருமை யாது? எத்தனையோ ஆண் மக்கள், தமது மனைவியர் விஷயமாக,

"தன்னுரைகொ ளாதமனை வாழ்க்கையது தன்னின்,
வெந்நிரயம் வீழும்வகை யேவிழுமி தம்மா,
அன்னரொடு மேவியமர் ஆடவர்த மக்குப்,
பின்னுமொரு கூற்றுமுள தோபிணியு முண்டோ?"

என்று வருந்தி வருவது நமது கட்புலனை விட்டகல வில்லையே. ஒருவர், பட்டீச்சுரம் என்னுந் தலத்தெழுந் தருளிய சிவ பெருமானிடத்து, ஏகாந்தமாய் நின்று, கண்கள் துன்ப வெள்ளங் காலக் கை குவித்து,

"சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப்,
பாய்கொண்டா னும்பணியும் பட்டீச்சு ரத்தானே!,
நோய்கொண்டா லுங்கொளலா நூறுவய தளவிருந்தும்,
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே."

என்று முறையிட்டதை நோக்கும்போது, அவர் கொண்ட தையலாற் கண்ட தொய்யல் எத்தன்மைத்தோ வென்று நம துள்ளம் கலங்க வில்லையா? இத் தன்மையரு மிருத்தலி னன்றோ உத்தமியரை உலகங் கொண்டாட முன் வருகின்றது.

"அன்பே யுயிரா யழகே யாக்கையாய்,
மன்பே ருலகுசெய் மாதவ மதனுல்
மலைமகள் கருணையுங் கலைமக ளுணர்வுங்
கமலையி னெழிலு மமையவோ ருருவாய்"

வந்த, இராம சுவாமி செட்டியாரின் இல்லக் கிழத்தியா ரான உமையாம்பிகையாரின் நடை யுடை பாவனை யாதி நற்குண நற்செயலைக் கண்டோர் இவரைப் போலும் "நற் பெருந் தவத்தவ ளாய நங்கையை"க் கண்ட தில்லை யென்றும், "இற்பிறப் பென்பதொன்றும், இரும்பொறை யென்பதொன்றும், கற்பெனப் படுவதொன்றும், இவ ரிடத்தில் களி நடம் புரிதலைக் கண்ணுறுகிறோ" மென்றும், "இத்தகையாரா லல்லோ உலகம் நிலைபெறுகிற" தென்றும், "இவரைக் காணப் பெற்ற எங்கள் பாக்கியமே பாக்கிய" மென்றும் கழறுவா ராயினர்.

உமையாம்பிகையார், புக் ககத்திற் றமது கணவ ருடன் சுகமே வாழு நாளில், ஒரு நாள் இராம சுவாமி செட்டியார் தாங் கொண்டிருக்கும் பெருங் கருத்தைத் தமது காதலியர்க் குரைப்பான்

கிட்டினர். அப்போது, "கொண்டான் குறிப் பறிவாள் பெண்டாட்டி" என்றபடி நாயகனது எண்ணத்தைக் குறிப்பாலறிந்து கொண்ட நாயகியார் பணிவுடன் அவரை நோக்கி, தமது சுபாவீக மான அமுத மொழியால், "என் னுயிர்த் துணைவரே! தங்களுடைய மநம் இவ் வில் வாழ்க்கையை எவ் வாறு நடத்தி வந்தால், அதனு லடையக் கூடிய பெரும் பயனை நாம் அடையலாமோ, அவ் வாறு நடத்திவர அடியாள் உப கருவியா யிருத்தல் வேண்டும் என்பதைப் பல நியாய வாயி லாக அடியாளுக்கு எடுத்துச் சொல்ல விருப்பங் கொண்டிருக்கிற தென்று தெரிய வருகிறது; இக் கருத்தே யன்றி வே றெக் கருத்தைக் கொண்டிருப்பினும் இருக்கட்டும்; பேதைமை என்பதே மாதர்க் கணி கலமா யிருத்தலின், புருஷர்களுடைய நோக்கம் இன்ன தென் றுணர்ந்து கொள்ளும் அறிவு அவர்களுக் குண்டாவது சுலப மன்று; "கண்டன மொழியாள் செய்த கன்ம முங் கணவர்க் காமே" என்று பெரியோர் சொல்ல அடியாள் கேட் டிருக்கிறேன்; அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னுங் குணங் களை இயற்கையிற் பெற் றுள்ள பெண்களுக்குச் சுதந்தரத் தன்மை யில்லை யாயினும், பேதைமைத் தன்மை குடிகொண் டிருத்தலின், அது காரண மாக அறிந்தோ அறியாமலோ பல தீங்குகள் அவர்க ளிழைக்கக் கூடும். அத் தீங்கு அவர்களுக்கும் அவர்களுடைய நாயகர்களுக்கும் பெருங் கேட்டைத் தருவதா யிருப்பதால், அவ் வா றொன்றும் அடியாள்மாட்டு நேரிடாதபடிக் காத்துவர நம திஷ்ட தேவதை யான பரமேசுவரியைச் சதா சிந்தித்து வருகின்றேன். தங்கள் விருப்பத்திற்கு மாறுது நடந்து வரல் வேண்டு மென்பதே அடியாளது முடி வான எண்ணம். நமது இல்லத்தின் வாழ் வானது செல்வத் தன்மையால் எவ் வளவு தான் பெருமையை யுடைத்தா யிருப்பினும், இல்லத்திற் குரிய சிலாக்கிய மான யோக்யதை, இல்லக் கிழத்தியின்கண் இல்லாது போய்விடின், அப் பெருமையை உண்மையில் உடையதாமோ? இது பற்றிப் பல வாறு அடியாளது தந்தையார் அடிக் கடி சொல்லி வருவ துண்டு. இஃ துண்மை

தானே. "இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்றல்லவோ அறிஞர் சொல்லுகின்றனர். அந்த இல்லா ளிடத்தில் மேற் சொன்ன நலம் இருந்தா லன்றோ அவளுடைய வீடு சர்வ நலத்திலும் புஷ்களமா யிருக்கும். ஒரு புருஷன் தா னடையத் தக்க சம்பத்துள் மனையாளினும் சிறந்த தொன்று மில்லை என்கின்றர். எப் போது, அவ ளிடம் கற் பென்னுங் கலங்கா நிலைமை பொருந்தி யிருந்தபோ தன்று? அஃ தில்லையேல், அப்படிப்பட்ட மனைவியுடன் கூடி வாழ்வதினும், "சற்றேனும், ஏறு மாருக இருப்பாளே யாமாயின், கூறாமற் சந்நியாசங் கொள்" என்றபடி துறவி யாவதே மே லல்லவா? அற்புதத் தன்மை வாய்ந்த கற் பென்னும் பொற் பற்ற அற்ப மனையாளுடன் விதி யில்லை யென்று வாழும் ஆண் மகன் எப்படித் தன்னை யிசழ்ந்து பேசும் எதிரிகளின் முன் ஆண் சிங்கம் போன்று நடக்கும் பெருமித நடையைப் பெறக் கூடும்? சில புருடர் தங்கள் மனைவியரை எவ்வளவோ காவலில் வைத்திருக்கின்றனர். இந்தக் காவலால் அவர்களது கற்பைப் புருடர் காத்தல் சாத்திய மாமா? ஸ்திரீகள் தங்கள் கற்பை மனோ திட மாகிய நிறையால் காத்த லன்றோ சிறப் புடைத்தாகும். நிறையால் தங்களைப் பாது காத்துக் கொண்டு, கணவரையே தெய்வ மாகப் போற்றி நின்று, அவர்கள் வாய் மொழியை உபதேச வார்த்தை யாக வேற்று, பூஜா காலத்தில் அவர்களைக் குரு மூர்த்த மாக நினைத்துச் சீடரைப் போல வேண்டுங் குற்றேவல்களைச் செய்து, சரச காலத்தில் மதனும், ரதியும் போ லிருந்து இன்பந் தந்து, கிருக விஷயங்களை நடத்தி வரும் பெண்டீர் வாய் திறந்து பெய் என்றால் மழை பெய்யு மன்றோ? ஆகையால், தாங்கள் எவ் வாறு நியமிக்க விரும்பினும் அவ் வாறு நடக்க அடியாள் சித்த மாக இருக்கின்றேன்" என்றனர். இவ் வினிய வசநத்தைக் கேட்டு நனியும் மகிழ்ந்த இராம சாமி செட்டியார், "இந்தச் சற் குணபாணச் சந்த்ர வதநியை நாம் மனைவி யாகப் பெற்றது, எப்படி விசுவாமித்திரரின் வரவைக் கண்ட தச ரத சக்ரவர்த்தி,

"நிலஞ்செய் தவமென் றுணரின் அன்று நெடியோயென்,
நலஞ்செய் வினையுண் டெனினும் அன்று நகர்நீயான்,
வலஞ்செய் துவணங்க வெளிவந்த இதுமுந்தென்,
குலஞ்செய் தவமென் றினிது கூற"

நேர்ந்ததோ? அப்படி எனது முன்னோரின் பூஜா பலத்தாற் போலும்; "கும்பிடப் போன தெய்வம் குறுக்கிட்டது" போல எனது உட்கருத்தை முகக்குறியால் அறிந்துகொண்ட இப்பொற் கொடியின் அறிவே அறிவு. "ஆயிரங் காலத்துப் பயிர்" ஆகை யாலே, ஒருவன் நற்பெண்டிரைத் தேடி மணத்தல் வேண்டும் என்பர் முதியோர். சிரம மில்லாமலே இப் பாக்கியம் எனக்குக் கிடைக்க லாயிற்று. இனி நான் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டுவ தில்லை. என் எண்ணம் நிறை வேறிப் போயிற்றென்றே துணிந்து சொல்வேன். சமீப காலத்து வித்வ சிகாமணி யொருவர், நன்மக ளொருத்தியைப் புகழ்ந்து பேசிய பாடலுள் அடியில் வருவது எனக்கு ஞாபக மிருக்கின்றது. அதாவது,

"காரியம் பார்ப்பள் கணக்கு மெழுதுவள்
காய்கறி யாக்கவுங் கெட்டி—அவள்
கைப்பட்டால் வேம்புங் கரும்பல்ல வோருசி
கண்டுநீர் மண்டுவீர் சட்டி—மற்றும்
ஊரிலே மாமியார் நாத்திமா ரெல்லாம்
உகந்திடுங் கற்கண்டு கட்டி—நிதம்
ஓயா விருந்து வந்தாலுஞ் சலியாமல்
உண்ணச்சொல் வாளந்நங் கொட்டி—அந்த
வண்ணக் குயிலைநீர் கிட்டி—இரு
கண்ணிற்கண் டால்வருந் திட்டி—துரைப்
பெண்ணைக் கொள்ள என்ன அட்டி" என்பதே.

ஆகையால், நான் கொண்ட கிருகாசிரமமே சிறந்த தாயிற்று. வியவ கார பாரமார்த்திக விஷயங்களைத் தவறின்றி முடித்துக் கொள் வேன்.

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்,
கல்லா ரறிவிலா தார்"

என்னுங் குறை என்வயிற் றீர்ந்தது. சிவத் தொண்டில் தாராள மாக இழிவேன். அடியார்களுக் கநுதிநம் அந்ந மிடுவேன்; தேவி யின் உபாசனையைக் கைப்பற்றுவேன்; எனது இனிய மனைவியை யும், இவ் வுபாசனையைச் செய்ய வைப்பேன்" என்று பூரிக்க லானார்.

இராம சுவாமி செட்டியாரும், அவரது மனைவியா ரான உமை யாம்பிகையாரும் இல் வாழ்க்கைக்கு இயன்ற தருமத்தை யாவரும் புகழு மாறு நடத்தி வந்ததோடு, அடியார்களுக்குத் திரி கரண சுத்தி யாய் அந்நம் படைத்து வந்து தேவி பக்தியிற் றலைமை யெய்தினர். "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" என்பது இவர்களிடம் பலிக்க லுற்றது.

இவ் வாறு, நிகழ்ந்து வரும் நாளில் அடியார் ஒருவர் அகாலத் திவர் அகத் தணுகினர். அவரோ வேதோக்த மான திரு நீற்றை மேனி முழுதும் அணிந் திருந்தனர். இது பூரண கலைகளோடு கூடிய சந்திரனை வழியும் படியாகத் தமது அவயவம் முற்றும் உருக்கி வார்த்தது போன் றிருந்தது. சகல பாபங்களையும் போக்கிச் சாரூப நிலையை யளிக்க வல்ல பஞ்சாக்கரத்தை இடையீ டின்றி ஜபித்த வண்ண மிருந்தனர். இவ் வண்மையோடு கூடிய இவரைப் பார்ப்போர் சாக்ஷாத் சிவ பரஞ்சுடரே இவ் வுருவாக வந்தது எனச் சொல்லு மாறு விளங்கினர். இவ் வடியார் செட்டியாரது கிருகத்தை நாடியதும், அவர் மநங் கரைந்து அடியாரை எதிர் நோக்கி நின்று அஷ்டாங்கமும் நிலத்திற் படியப் பணிந்து "சுவாமிகளே! ஆகிஞ்சி யத்வமும், சிறியேனு மாகிய அடியேன் தேவரீரை இன்று தரிசிக்கப் பெற்றதும், அடியேனது முன்னோர்கள் செய்து வந்த தவப் பயனே போலும்; சுவாமிகள் கிருபை கூர்ந்து அடியேனது குடி சையிற் றிரு வமுது கொள்ளு மாறு பிரார்த்திக்கின்றேன்" என்று தாழ்மையுடன் விண்ணப்பித்தனர். அதற் கடியாரும் இசைந்தவர் போன்று செட்டியா ருடைய கிருகத்திற் சார்ந்தனர். நற் றவத்

தவர் வேடங் கொண்டு நாடிய அடியாரைக் கண்டதும் செட்டியார் மனைவியார் அறு சுவையோடு கூடிய அந்ந பாநாதிகளைக் கரும்பினும், கண்டினும் விரும்பிடுஞ் சுவையினும், மீசுரப்பட விரைவிற் சமைத்து, நாயகர் அடியவருடன் பேசுவதற்குள் பரிமாறுந் தருணத் தாக்கி, நாயகனது வரவை எதிர் பார்த்திருந்தனர். செட்டியார் திடீரென இல்லம் புக்கு மனைவியை நோக்கிப் பெரியார் ஒருவர் வந்திருக்கின்றனர்; பசிப் பிணி தாளார் போற் றோன்றுகின்றது. விரைவில் ஏதேனும் உதவினல் நாம் தந்நிய ராகக் கூடும்; உனது கருத் தென்ன?" என்று கூறினர். உமையாம்பிகையார் "நாயக! உமது எண்ணத்திற் கென்றேனும் தடை நேரிட்டதுண்டோ? எல்லாம் உமது களங்க மற்ற திரு வுளம் போலன்றோ நிறை வேறி வருகின்றது. அடியாளால் ஆவதென்ன? உடனே பரதேசியா ராகிய சுவாமிகளைப் போஜநஞ் செய்யு மாறு அழைத்து வாலா மென்றனர். செட்டியாரும் அவ் வண்ணமே சுவாமிகளை யழைத்து வந்து நீர் கொடுத்துப் போஜந சாலைக்குட் புகு மாறு வேண்டினர். இதற்குள் யாவுஞ் சித்தமா யிருந்தது. அடியார் அன்புட னவ் வமு தருந்தி, ஔவைப் பெருமாட்டி ஒரு காலத்திடைப் பெண்களா லுபசரிக்கப் பெற்ற போது, "வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய், நெய்தான் மணந்து நிறம்பசந்து— நொய்தாய், அடகென்று சொல்லி அமுதம் படைத்தாளே, கடகஞ் செறியுமிவர் கைக்கு" என்று புகழ்ந்தது போல, பெரு மகிழ்வுமூண்டு, "அன்ப! நின் இல் வாழ் வன்றோ இல் வாழ்வு; இதற்குத் துறவு நிலையும் ஈடாகாதே; ஆயினும், குறை யொன் றுண்டு; அஃ தியா தெனின்,

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்,
நன்கல னன்மக்கட் பேறு"—என்ற ஆன்றோர் வாக்கிற் கிலக்கிய மான நன் மக வில்லை. அதுவும் நீங்கள் அநுஷ்டித்து வரும் தேவி யுபாசனையால் நிறைவேறும்"—என்று ஆசி கூறி மறைந்தருளினர். இத் தன்மை யாக இராம சுவாமி செட்டியாரும், உமையாம்பிகையாரும் உலகம் மெச்சு மாறு இசை பரப்பி வாழ்ந்து வந்தனர்.

## 3. ஸ்ரீ சுவாமிகளின் அவதாரம்.

ஒரு பகலிரவு ஒன்பது மணிக்கு மேல் இராம சுவாமி செட்டியார் போஜந மருந்தியதும், தாம்பூலங் கைக்கொண்டு, தமது அந்தப்புறத்தின் அழகியதோர் முற்றத்தில், ஆயாசந் தீர்த்துக் கொள்ளும் அழகிய சாய்வில் அமர்ந்து, சாய்ந்த வண்ணம் தம்முடைய மநதை ஏதோவோர் ஆழ்ந்த விஷயத்திற் செலுத்தியிருந்தனர். அக் காலம், குமுத நண்பன், தனது அமுத கலையாகிய செங்கோலைக் கையிலேந்தித், தன்னரசாட்சியை நிராடங்கமாகச் செலுத்த, அந்தரமென்னுஞ் சுந்தர பீடத்துடுவின நடந மாதர் புடை சூழ வந்தெய்தினன்.

பாற்கடற் படிந்து பாலெலலாம் பருகிப் படர் நிலாச் சுடர்ப் பனிக் கற்றையைப் பாயிருளகல, மாயிரு ஞாலத் துலவ விட்ட இவனது காட்சி, மின்னலே நன்னிலத் திழிந்து விளையாடுவது போன்றிருந்தது. இத் தருணத்தில் உமையாம்பிகையார் தமது கிருக பணியனைத்தும் பூர்த்தி செய்து அந்தப்புர மணுகினர். நாயகரது சிந்தை வேறொரு நோக்கத்திருந்தமையின், அவர் தமது நாயகியாரின் வரவைக் கவனியா திருந்தனர். இதனை யுணர்ந்த மனைவியார் நாயகரின் அருகே நெடு நேரம் நின்றிருந்து, தாம் வந்திருப்பதைக் குறிப்பா லறிவித்தனர். உடனே செட்டியார் திடீரென விழித்துக் கொண்டவர் போலத் தமது துணைவியின் முகத்தை நோக்கினர். நாயகியார் கணவரைப் பார்த்து "தேவரீரது கருத்து வேறேதோ வொன்றின் மீது ஆழ்ந்திருந்த தென்று தெரிகின்றது. அதற்கு யான் இடையூறானேன் போலும்" என்றனர். அதற்கு நாயகர், "அப்படி யொன்று மில்லை; உனக்கு அறிவிக்கத் தகாத தென்ன இருக்கின்றது? நமக்கோ போதிய செல்வ மிருக்கின்றது; கூடிய வரையில் செய்யத் தக்க அறத்தையும் செய்து வருகின்றோம்; ஆயினும், ஏ! அருந்ததி யனைய கருந் தடங் கண்ணாய்! நம் போன்றார் செலுத்தக் கடவன வாய கடன்களோ மூன்று. அவை, முனிவர் கடன், தேவர் கடன்,

தென் புலத்தார் கடன் என்பனவாம். இவற்றுள், முனிவாது கடனை வேதாத்தியயநத்தாலும், தேவாது கடனை யாகத்தாலும் முடித்து வருகின்றோம். தென் புலத்தாரது கடனைச் சற்புத்திரப் பேற்றா லன்றி முடித்த லசாத்திய மாதலின், அக்குறை யொன்றே என்னைக் கவலைக் கடலு ளழுத்துகின்றது. நாம் அநுஷ்டித்து வரும் தேவி யுபாசனையால் இக் குறை நிவிர்த்தியாகும் என்று சில திநங்களுக்கு முன் நம்மிடம் வந்த அடியா ரொருவர் தெரிவித்தனர் அஃதெப் போது நிறை வேறுமோ அறிகிலேன்.

'சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலும்,
என்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னங்,
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்,
சிறுகுதலை கேளாச்செவி."

என் றன்றோ அறிஞர் சொல்லுகின்றனர். மற்றும்,

"மகவே மேலாங் கதியாக்கும் மகவா னுலகந் தனைவெல்லும்,
மகவின் மகவான் முடிவின்மை யெய்து மகவின் மகவளித்த,
மகவான் மேலைப் பதமுறுந்தென் புலத்தார் கடனை மாற்றுவதும்,
மகவா னன்றி யில்லையென வகுத்தான் றெரித்துக் கண்ணுவனே"

என்பதும் நாம் கேட்டுள்ளது தானே. முன்னையோர் பலரும் நற்கதி யுற்றது மகப் பேற்றா லன்றி மற் றியாதால்? மநந் துறவடைந்த மிருகண்ட மகரிஷியும் மக வொன்றின் பொருட்டுப் பட்டபா டறியாதா ரறியாதவரே யல்லவா? தசரதச் சக்கரவர்த்தி, புத்திரப் பேற்றைக் குறித்து எத்தனை வருத்த முற்றனர். இவ்வாறு வருந்தியோர் பலர், தெய்வாநுக்கிரகத்தால் தாங் கொண்ட எண்ணங் கைவந்து நற் கதிக் காளாயினர். புத்திரத் திரு வற்ற இருக மானது, பொறை யற்ற அறிவையும், துறை யற்ற தடாகத்தையும், நறை யற்ற மலர் மாலையையும், சிறை யற்ற நகரத்தையு மல்லவோ ஒக்கும். மண மலர் மலரப் பெறாத சோலையும், இளமதி யெய்தப் பெறாத அந்தியும், தாமரை தவழப் பெறாத வாவியும்

எப்படிப் பிரகாசியாவோ? அப்படி நமது மனை யானது பால் மண மருத பசுங் குழவி படரப் பெருத குறையால், அழகிழக்க லாயிற்று. எழு தரும் படிவத் திளங் குயிலே!

"மெய்தாநம் வண்மை விரதந் தழல்வேள்வி நாளுஞ்,
செய்தாலு ஞாலத் தவர்நற் கதிசென்று சேரார்,
மைதாழ் தடங்கண் மகவின் முகமன்னு பார்வை,
எய்தா தொழியிற் பெறுமின்ப மற்றெவ னுமில்லை."

என்னும் நிறை மொழி மாந்தரது மறை மொழி என் னுளத்தைப் பெரிதும் பேதிக்கின்றது" என்றனர். இவற்றை யெல்லாஞ் செவி சாய்த் தருளிய உமை யாம்பிகையார், கணவரது வதநத்தைக் கண் குளிர நோக்கி, "சுவாமி! தேவரீர் சொல்வது உண்மையே. நம திஷ்ட தேவதை யான பரமேசுவரி நம்மைக் கைவிடாள். அறி வறிந்த மகவு ஒன் றளித்தாற் போதும்.

'நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றாலுங் குலமுழுது நன் மை புண்டாம், அன்றியறி வில்லாத பிள்ளையொரு நூறுபெற்று மாவ தண்டோ, மன்றினடம் புரிவாரே தண்டலையா ரேசொன் னேன் வருடந் தோறும், பன்றிபல வீன்றுமென்ன குஞ்சரமொன் றீன்றசனற் பலனுண் டாமே." என்பது நாம் சிந்திக்கற்பாலதே. இன்றேல்,

"வல்லமையான் முடிவதுண்டோ தலைகீழாய் நின்றாலும் வருவ துண்டோ, அல்லதுதா னவன்செயலே யல்லாமற் றன்செயலா லாவ தண்டோ, புல்லறிவான் மயங்காமற் றண்டலையா ரடிப ணிந்து புத்தி யுண்டாய், இல்லதுவா ராதுநமக் குள்ளதுபோ காதெனவே யிருக்க லாமே." என்கிற படி தேவியின் திரு வருளை நம்பி வாளா யிருத்தலே நலம்" என்றனர்.

அநந்தரம் செட்டியார், "காதலி! நீ யுரைப்பதும் வாஸ்தவந் தான். ஒருவன் பெறத் தக்க பாக்கியங்களுள், அறிய வேண்டு மவற்றை யறிய வல்ல புதல்வரைப் பெறுதலினும் சிறந்த தியாது?

இச் சீர் வாய்ந்த புதல்வன் ஒருவனை நாம் உயிர்க்கப் பெற்றாலே, நமது கவலை முற்றும் கனவைக் கண்ட பஞ்சா மன்றோ? தீ வினை தேய்தற் குரிய நல் வினைகளை மேற் கொண்டு ஒழுக வல்ல சற் புத்திரனால், வினை வயத்தா னுறற்பால துன்பங்கள் ஒருவனை எழு பிறப்பினு மடையாவே. புதல்வர் தேடிக் கொள்ளுஞ் சுபாசுபங் களுக்குப் பெற்றோர் காரணரா யுண்மையின், அவை பெற்றோ ரையே அடைகின்றன; ஆதலால், புத்திரரைப் பெற்றோர் "தமது பொரு" ளென்கின்றனர். மக்கள் கைப்பட்ட அந்நம் தேவாமிர்தத் தினும் இனி தாக வாய்க்கு இன்பந் தருவ தாம்; அவர்களைப் பரிசிப்பது தேகத்திற் கின்பந் தருவதாம்; அவர்க ளுடைய மழலைச் சொற்கள் செவிக் கின்பந் தருவதாம்; இவ் வினிய சொற்களைக் கேட்கப் பெறாதவரே, குழல் வீணை யிவற்றின் இசையை இனி தென்பர். ஆகவே, நன் மக வொன்றைப் புன் மலங் கழிய, நாம் அடையு மாறு சிவ நேசச் செல்வ ரான அடியார் நமக் கருள் செய்தபடி, தேவி யுபாசனையிற் சிந்தனையைத் திரி காண சுத்தி யோடுஞ் செலுத்தக் கடவோம்" என்றனர். இவ் வண்ணம் வார்த்தை யாடி யிருந்து, தேவியின் திரு வடிப் போதிற் சித்தம் நிலைக்கப் பெற்றவ ராய் வாழ்ந்திருந்தனர். பின் சில காலஞ் சென்று சகல ஜகங்கட்குந் தா யான மகா தேவியின் திரு வருளால் உமை யாம்பிகையார் திரு வயிறு வாய்க்கப் பெற்றனர். பத்துத் திங்களும் முற்றுப் பெற்றது. விய வருஷம் சித்திரை மாதம் 9-ந் தேதி மங்கள வாரம் திரிதியை திதி விசாக நக்ஷத்திரம் தநுர் லக்நம் கூடிய சுப தினத்தில் நமது சுவாமிகள், கருவிற் றிரு வின ராய், அவதரித்தனர். தாய் தந்தையரும், பந்து வர்க்கத் தினரும், மற்று முள்ள இஷ்டரும் ஆநந்த பரவச ராய், தானாதி கிரியைகளால், சுவாமிகளின் ஜநனோற்சவத்தை மிக்க வைபவத் துடன் கொண்டாடினார்கள். இவரைக் கண்ணுறப் பெற்ற பலரும் இவரது திரு முகத் துள்ள தேஜசாதி குறிகளால், இவ ரொரு மகா னுவ ரென்று வாழ்த்தினர்; சிலர், "பெற்ற தாயர் வயிற்றினைப்

பெரு நோய் செய்வான் பிறந்த" நம்போ லாகாது, இவர துற்பத்தி, "பயன் மரமுள்ளூர்ப் பழுத்தற்று" ஆயிற்று என்றனர். "இவனைப் பெற்ற வயிறுடையாள் என்ன தவஞ் செய்தாளோ?" என்று அநேகர் இவரது தாயாரைப் புகழ்ந்தனர். கருணும்பிகை யாகிய தேவிக்கு மகாபிஷேகாதி வைபவங்களைச் செய்து முடித்தனர். பெற்ரோர், தக்க நாளில் பெரியோர்களைக் கொண்டு இவர்க்கு ஜாத கன்மாதிகளைச் செய்து, தூர்க்கா தேவியின் பெய ராகிய காளி யப்பன் என வீட்டின் பெய ராக வைத்து, "காசி" என்னும் திரு நாமத்தை வழங்கும் நாம காண மாகச் சூட்டினர். பின்ன ராக வேண்டிய உபநயநாதி கிருத்தியங்களுங் குறை வற நிறை வேறின. யாவரும் சுவாமிகளின் பால சேஷ்டைக ளாதி திருச் செயல்களைக் கண் பெற்ற டல ஞகக் கண்டு களித்து, மிக்க அன் பொடும் இவரை வளர்த்து வந்தனர்.

சுவாமிகளின் சரீர வமைப்பு, நீல மேகம் போன்ற நிறம், கண் ணில், செவ் வரி படர்ந்து விளங்கும். உருவம் நீண்டு பெருத்து இருக்கும். யாவரும் கண்டு நடுங்கும் பார்வையோடு விளங்கும். கை கால் முதலிய சகல அவயவங்களும் புருஷ சாமுத்திரிக லக்ஷணப் படி அமைந்து விளங்கும். இடது தொடையில் மச்சம் ஒன்று இருக்கும். உடம்பு முழுதும் கருப்பு ரோமம் அடர்ந்திருக்கும். காது நன்ருக நீண்டு விரிந் திருக்கும். கண் பெரிதாய் நீண்டிருக்கும். விரிந்த மார்புடைய தாக விளங்கும். கையில் சந்நியாச ரேகையும், வித்தியா ரேகையும், சகல ஜந வசிய ரேகையும், சகல ஜநங்களுக் கும் குருவா யிருக்கும் ரேகையும், மத ஸ்தாபந ரேகையும், பிற மத கண்டந ரேகையும் ஆகிய ஆறு ரேகைகள் விளங்கும். வாக்கு வல்ல மையா யிருக்கும். அவதார புருஷர்களுக் குள்ள புருஷ லக்ஷணங்கள் யாவும் ஒன்று கூடி ஓரிடத்தில் பிரம தேவரால் செய்யப்பட்டது போல் சரீரம் காந்தியோடு விளங்கியது.

சுவாமிகள் ஜநநத்திற்கு முன், பெரியண்ணன் என்றும், பழநி யப்பன் என்றும், இரண்டு ஆண் மகவும், சுவாமிகள் ஜநநத்திற்குப்

பின் சிதம்பரம் என்ற ஆண் மகவு ஒன்றும், விசாலாக்ஷி என்ற பெண் மகவு ஒன்றும் ஈன்றனர். இவ் வைவர்களுள் விசாலாக்ஷி என்னும் பெண் மகவு ஒன்றுக்கு மாத்திரம் விவாகம் நடந்து வம்சம் விருத்தி யாகி இருக்கின்றது. ஏனைய ஆண் மகவு நால்வரும் பிரமச் சாரிக ளாகவே யிருந்தனர், இருக்கின்றனர்.

---

## 4. பால்ய வித்தியாரம்பம்.

இவ் வாறு, கண்ணினைக் காக்கின்ற இமையிற் பாது காத்து வரும் சுவாமிகளுக்கு, வயது ஐந்து நெருங்கியதையும், இவ் வளவு இளமையிலேயே இவ ரிடந் தோன்றி வந்த புத்தி நுட்பத்தையும், கண்ட இராம சுவாமி செட்டியார், ஒரு நாள், தமது நாயகியை விளித்து, "பெண்ணே! நமது அருந் தவப் பே ருகிய குழந்தைக்கு இப்போது வயதோ ஐந் தாகின்றது.

"ஐயாண்டு காறும ரையனு யாண்டுக,
ளைம்மூன்று காறும டியனு—யெய்தியமேல்,
மித்திரனுக் கொண்டு மேவுக தா னீன்ற,
புத்திரனை யன்புபு ரிந்து."

என்கிற படி, நாம் இது பரியந்தம் நம தரும் பெறற் பேற்றை அரச னின் மதித்து, அவனது பால சேஷ்டிதங்களுக் கடங்கி யன்பு காட்டி வந்தோம். இனியும் அவ் வாறு நடந்து வருதல்,

"மாலினு லிருவரு மருவி மாசிலாப்,
பாலனைப் பயந்தபின் படிப்பி யாதுயர்,
தாலமேற் செல்வமா வளர்த்தல் தங்கட்கோர்,
காலனை வளர்க்கின்ற காட்சி போலுமே."

என்ற படி, நா மீன்ற குழவி நமக்கே கூற்று மன்றே? ஆதலால், களை யெடுக்க எப்படிப் பயி ரானது பல னளிக்குமோ, அப்படிக் குற்றங் கடிந்து, குணம் வியந்து, மிக்க தயையோடுந் தம் அருமந்த மக்களை வளர்த்து வருந் தாய் தந்தையர்க்கே, அம் மக்கள் இம்மைப்

பேற்றிற்கும், மறுமைப் பேற்றிற்கும் துணை யாய் நின்று, தன் புரு வண்ணம் காக்கும் ஆக்கத்தில் ஊக்கம் பெற் ரோங்குவர். ஐந்து வயது முதல் பதி னைந்து வயது பரியந்தமே குழந்தைகள் அடக்கி யாளுந் தருமத்திற் குரிய ராவர். குழந்தையின் க்ஷேமத்தையும், தமது க்ஷேமத்தையுங் கருதிய பெற்ருேர், தங் குழந்தைக்குச் செய்ய வேண்டுவனவற்றைச் செய்து முடிக்க, இக் காலத்தையே தக்க தென் றேற்பர். "ஐந்தி லறியாதார் ஐம்பதிலுந் தா மறியார்" என்பது பழ மொழி யல்லவா? "இளமையிற் கல்" என்பதும், இது பற்றி வந்ததே யாம். இளமைப் பருவத்திற் பழகுவ தனைத்தும், பசு மரத் தாணியிற் பதியும். "தொட்டிற் பழக்கம் சுடு காடு மட்டும்" என்பதையும் நாம் கவனித்தல் வேண்டும். இத் தருணந் தப்ப விடின் பாலரைத் திருத்துவ தருமை யாம். "தோளுக்கு மிஞ்சின் தோழன்" என்று கூறுகிருர்கள் பெரியர். இத்யாதி நியாயங்களை நோக்கு மிடத்து,

"வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை,
மிக்கசி றப்பின ரசர்செறின்—வவ்வார்,
எச்சமெ னவொருவன் மக்கட்குச் செய்வன,
விச்சைமற் றல்லபி ற."

என்பதே வெளியாகின்றது. கல்விச் செல்வமே மக்கட்குச் சிறந்த தொன்ருகும். இதனை ஒருவராலும் அபகரிக்க முடியாது; பிறர்க் களித்த விடத்துங் குறையாது.

"கைப்பொருள் கொடுத்துங் கற்றல் கற்றபின் கண்ணு மாகும், வெய்ப்பொருள் விளக்கும் நெஞ்சின் மெலிவிற்கோர் துணையு மாகும், பொய்ப்பொருள் பிறவாம் பொன்னுந் துணவியாம் புகழு மாகும்" என்னும் இப் பொருளே, நமது துப் பறிந்த புத்திரனுக் கின்றி யமையாத தொன்ருகும். தர்ம அர்த்த காம மோக்ஷங்க ளாகிய உறுதிப் பொருள்களை யுணர்த்த வல்ல நூல்களை விபரீத ஐயங்க ளற நல்லோர் பலருடனும் பன் முறையும் பயில வைப்போ மானல், அப் பயிற்சி, நமது பாலனை இல் வாழ்வுழித் தருமார்த்தங்

களுக் கேது வான முயற்சியி லிருத்தி, அறம் பொருள்களா லாய வின்பத்தை யநுபவிக்கவும், தாந முதலியவற்றைச் சற் பாத்திரத் திற் றடை யின்றி நடத்தவுஞ் செய்யும்; இல் வாழ்வி னிச்சை யற்றுத் துறந்துழியும், தவத்தால் மெய் யுணர்ந்து அவா வறுத்தலி னும் நிலை பெறச் செய்யும்.

"எழுத்தறியத் தீருமி ழிதகைமை தீர்ந்தான்,
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகு—மொழித்திறத்தின்,
முட்டறுத்த நல்லோன் முதனூற்பொ ருளுணர்ந்து,
கட்டறுத்து வீடுபெ றும்."

என வருவதும் நமது கருத்திற் பதிந்ததே யாம். இனி யுன் சம் மதம் யாது?" என்றனர். உமை யாம்பிகையார் நாயகரைப் பணிந்து, "தேவரீர் சொல்லி வந்த யாவும் சத்தியமே. அறிஞர் கூடும் அவையின்கண் எவரினுஞ் சீரியனு மாறு புத்திரனைக் கல்வி யுடையவ னாக்குவ தன்றோ அவனைப் பெற்ற தந்தை யவனுக்குச் செய்யும் நன்மை யாவது. இவ் வண்ணம் புதல்வனை அறி வுடையவ னாக்கின், அது இந் நில வுலகத் துயிர்கட் கெல்லாம், தாய் தந்தைய ரடைவதினும், பெரி தடையத் தக்க மகிழ்ச்சியைத் தா வல்ல தாம். தன் மகனை, 'யறி வுடையார் கல்வி கேள்விகளால் நிறைந்தவ' னெ னச் சொல்லக் கேட்ட தாயும், அவனை யுயிர்த்த வமையத் தடைந்த களிப்பினும், மிக்க களிப்பை யன்றோ அடைவள். ஆகையால், தங்க ளிஷ்டம் போன்றே இப் போதே நமது குழந்தைக்குக் கல் வியின் விருப்பை யூட்ட முற்படல் வேண்டும்.

"கற்பக் கழிமட மஃகு மடமஃகப்,
புற்கந்தீர்ந் திவ்வுலகின் கோளுணரும்—கோளுணர்ந்தால்,
தத்துவ மான நெறிபடரு மந்நெறி,
இப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பால்,
உயர்ந்த வுலகம் புகும்."

என்று பெரியோர் கூறக் கேட்டுளேன்" என்றனர். இருவரும், இவ் வண்ணம் ஏகோபித்த மாத்தாய்த், தமது புத்திர ரான சுவாமி

களுக்குப் படிப்பில் அபிருசி யு(விருப்ப மு)ண்டா மாறு தூண்டித், தெருத் திண்ணைப் பாட சாலைகளுள், ஒரு பாட சாலையில் நன் ஞளில் வைத்து, ஆரம்ப நூல்களைக் கற்பிக்கு மாறு செய்தனர். சுவாமிகளும் அப் பாட சாலையில், கற்றற் குரியவற்றை உபாத்தி யாயர் ஒரு முறை சுட்டிக் காட்ட, அநாயாச மாய்க் கற் றுணர்ந்து, பத்து வய தாகு முன்னரே உலக நூலிற் றேர்ச்சி யுற்றனர். இவரது அதி தீவிர பக்குவத்தைக் கண்ணுற்ற பலரும் அதிசய முற்றுச், சுவாமிகளை வாழ்த்துவா ராயினர். அக் காலையிலே, சுவாமி களுக்குக் குளத்தின் படித் துறைகளில் உள்ள செம் பிரான் கல்லின் மத்தியில் இயற்கையில் உண்டாகி யிருக்கும் வெண்மை நிறக் கற்களை யெல்லாம் சிவ லிங்க மாகப் பாவித்துச் செம்மார்ந்தா சம்ஸ்காரம் வெளிப்பட்டது. இதனால், இளமையிலே ஈசுவர பக்தி யிருந்தது என உணர வேண்டும்.

---

## 5. வியாபார அர்த்த மாக வெளித் தேச யாத்திரை.

சுவாமிகள் இன்னணம் உலக நூலிற் றேர்ந்ததும், பெற்றோர் இவரைத் தங் குலாசார தருமத்தி லிணங்கச் செய்தனர். தாய் தந்தையர் விருப்பின் படி இவரும் தமது இனத்தாருடன் சேர்ந்து வாணிபத்திற் பழக லானார். இவ் விஷயத்திற் சுவாமிகளுக்கு விருப்ப மில்லை யாயினும், கல்வியாற் பெற்ற அறிவின் பய னாகிய ஒழுக்கத்தை மேற்கொண்டு உலகத்தோடு பொருந்த ஒழுகி வருவது கற்றவரின் கடமை யாதலின், அக் கடமையை அநாதரிப்பது தரும மன் றென் றெண்ணியும், குல தருமத்தைச் சில நாளேனும், கைப்பற்றி விட வேண்டு மென்று கருதியும், இவ் வாணிபத்திற் றலையிட லானார். பண்டங் கொள்வோர் கேட்கும் பொருள் தம் மிடம் இல்லை யாயின், அதற் கின மான மற் றொன் றிருப்ப தாகப் பேசியும், இருப்பின், கொள் விலை யாதியவற்றைக் கேட்போர் பிரமிக்கு மாறு அறுத்துப் பேசியும், லாபத்திலேயே நோக்கங்

47914
Q1:3320



கொண்டவ ராய், பொருள் வாங்க வந்தவரைச் சொல் வன்மையால் வசீகரிக்க வல்ல தம் இனத்தவரின் ஆற்றலைக் கண்டு மகிழ்ச்சி யுறுவார். கடல் படு திரவிய மான உப்பு முத்து பவள முதலிய வற்றையும், மலை படு திரவிய மான மிளகு கோட்டம் அகில் தக்கோலம் முதலியவற்றையும், மருத நிலத் துறுஞ் செந் நெல், சிறு பயறு,செவ் விள நீர், கரும்பு முதலியவற்றையும், முல்லை நிலத் துறும் தேன் மயிற்பீலி நாவி முதலியவற்றையும் மற்றுமுள்ள பஞ்சு பட்டு சரிகை யிவற்றா லாய ஆடைகளையும், திறந் தெரிந்து விற்பனை செய்யும் உளவுகளை அவற்றிற் குரிய பரிபாஷையுடன் விரைவில் நன் குணரும் வைசிய மாக்கள் போல், வெள்ளி நாணய லேவா தேவி செய்யும் கடையில் இருந்து செவ்வனே உணர லாயினர்.

“வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்,
நடுவண தெய்தவி ருதலையு மெய்தும்,
நடுவண தெய்தாதா னெய்துமு லைப்பெய்,
தடுவது போலுந் துயர்.”

என்ற படி அறம் பொருள் இன்ப மென்னும் மூன்றில் நடுவ தாகிய பொருளைப் பெருக்கினார்க்கே ஏனைய அறமும்,இன்பமும்,கைகூடும்; பொருளை யுபேக்ஷித்தவர்க்கு என்றுந் துன்பமே பய னாம். ஆதலால், நீர் இப் பொரு ளீட்டும் வியாபாரத்திற் சிரத்தை கொண்டிருத்தல் வேண்டு” மென்று தம் இனத்தார் அடிக் கடி போதித்து வந்ததையும் கேட்டு வந்தார். “ஒரு பொரு ளாக மதிக்கப் பெறா தவனையும், மதிப் புறச் செய்ய வல்லது இப் பொருளே தவிர, வேறு பொரு ளொன்று மில்லை; அதனாற் றான் இப் பொரு ளீட்டினரை யாவரும் புகழ்கின்றனர்;

“ஆகா தெனினும கத்துநெய் யுண்டாயின்,
போகா தெறும்பு றஞ்சுற்றும்—யாதும்,
கொடாஅ ரெனினும்உ டையாரைப் பற்றி,
விடாஅ துலகத்த வர்.”

என்பதுங் கேட்டிலீரா?

"பொருளிலார்க் கின்ப மில்லைப் புண்ணிய மில்லை யென்று,
மருவிய கீர்த்தி யில்லை மைந்தரிற் பெருமை யில்லை,
கருதிய கரும மில்லைக் கதிபெற வழியு மில்லை,
பெருநிலந் தனிற்சஞ் சாரப் பிரேதமாய்த் திரிகு வாரே."

என்றபடி இவ் வொன் றற்றவர்க்குப் பொன் றுந் துணையும், இங்குஞ் சுகம் ஒன்றுவ தின்றாம்; பொன்றிய பின்னர், அங்குஞ் சுக முறற் கேது வின்றாம். ஆகவே, பொருள் செய்தற் குரிய நெறியை நன் கறிந்து, கொள் விலைக்கு மேல், அற்ப லாபத்தையே வைத்துப் பொருள் தேட லுற்றார்க்கு, அது வெள்ள மென்னும் எண்ணினும் அதிக மாகப் பெருகும்.

"தத்தநி லைக்குங்கு டிமைக்குந் தப்பாமே,
ஒத்தக டப்பாட்டிற் றாளுன்றி—எய்த்தும்,
அறங்கடையிற் செல்லார்பி றன்பொருளும் வெஃகார்,
புறங்கடைய தாகும்பொ ருள்."

என வருவதுஞ் சிந்திக்கற்பால தன்றோ? வஞ்சனை மார்க்கத்தால் வரும் பொருள், முடிவில் சஞ்சலத்தையே தரு மென்பர் தக்கோர். இப் பழி யஞ்சி நடத்தல் வேண்டும். நமது பெருமை,

"திடமுடன் றன்மநத மிந்துவா ணிபமதே
செய்வார தாய மிஞ்சிச்-
செலவுசெய் யார்யாவர் வருகினுங் கண்டபடி
தேர்ந்துநிறை போலு ரைப்பார்,
அடகுதந் தாலுமரி யாதையில் லாருக்க
ரைக்காசு கடனு முதவார்-
ஆனமறு நீதியுடை யோர்களுரை வாய்மையா
லளவிலாப் பொருள்கொ டுப்பார்,
கடுந்தனி லெட்டிலொரு கூறுவர வெனினுங்க
ணக்குமுறை தன்னில் வழுவார்-
காரியவி சேஷமதி லொருகோடி யுதவுவார்
கருணைவர்த் தகர்பெ ருமைகாண்,"

என் றன்றே கொண்டாடப்படுகின்றது. இவை யனைத்துந் தேர்ந் தொழுகக் கடவீர்" என்று மற்றுஞ் சிலர் ஓதினர். இவ் வசநங் களுக் கியைந்து சுவாமிகள், வர்த்தகப் பிரவர்த்தியில் அமர்ந்திருந் தார். பத்து வயது பூர்த்தியானதும், அதாவது மன்மத வருஷத்தில், "திரை கடலோடியுந் திரவியந் தேடு" என்னும் முது மொழி கருதி, சுவாமிகள் வெளித் தேச யாத்திரை செய்ய விழைவு பூண்டனர். பர்மா தேசத்தின் சிறப்பைப் பலர் சொல்லக் கேள்வி யுற்றார். விநோதம் வாய்ந்த விதம் விதமான பட்டாடை யுடுத்துப் பார்ப்பவர் கண்கள் பறிபோமாறு உலவும் அத் தேசத்துப் பெண் மக்களையும், ஆண் மக்களையும், தேவதா ஸ்திரீ புமான்களுக்கே இணையாகச் சொல்ல வேண்டும். கதி ரொளி பாப்புஞ் சதி ருள மணிக் குலங் களைக் கரையிற் கொழிக்குந் திரை யுடைய ஐராவதி யென்னும் மகா நதி மருவப் பெற்ற, அத் தேசத்தின் வளங்க ளனைத்தையும் களங்க மறச் சொல்வதற்கு யாவரா லாகும்? தேவ லோகத் துள்ள ஐரா வதம் என்னும் வெள்ளை யானை அத் தேயத்து முண்டு. தேவ போகங்கண் முழுவதும் ஆங் கநுபவிக்க லாம். அத் துணைச் சீர்த்தி வாய்ந்த பர்மா தேசத்திற்கு வர்த்தகார்த்த மாகச் சுவாமிகள் நீராவி யுடை மரக் கலத்தில் பிரயாண மாய்ச் சுகமே ஆங் கடைந்தனர். வியா பாரத் தொழிலி லிருந்தே ஆங் குள்ள காட்சிக ளனைத்துங் கண் குளிரக் கண்டு, பர்மா இந்து ஸ்தானி என்னும் இரண்டு பாஷைகளை யும் பேச எழுதப் படிக்கக் கற்றனர். அங் கிருந்து பர்மாவைச் சுற்றி யுள்ள பிரதேசங்களுக்கும் யாத்திரை செய்து, ஆங் காங் குள்ள விசித்திரங்களை யெல்லாங் கண்ணுற்றுத் தமது தொழிலில் கண்ணு யிருந்த போது, சுவாமிகளுக்கு ஈசுவர பக்தி அதிக ரித்து, உலக நூலில் வெறுப் புற்று, உறுதி யளிக்க வல்ல அறிவு நூலிற் பிரவண ராய், தக்க குரு மூர்த்தியைத் தேடிச் சரண் புகத் தம தூருக்கே திரும்ப லாயினர். இவ் வாறு, திரும்ப நேர்ந்தது குரோதி வருஷத்தின் முடிவி லாம்.

---

## 6. தமிழின் வைபவமும், கோவிலூரின் பிரபாவமும்.

சுவாமிகள் தமது ஜந்ம ஸ்தாந மான தேவி கோட்டையை யண்மியதும், தாம் இது காறும் சாதாரண மாக எழுதப் படிக்கப் பேசக் கற்ற தமிழ் பர்மா இந்து ஸ்தாநி என்னும் பாஷைகளுள் தமிழே தமக்கு எவற்றினும் இனிய தென்று தோன்ற, அதிற் கசடறக் கற்க முயல்வதற்கு உற்சாக மெய்தினர். அதுவே தமக்கு ஈசுவர பக்தியை யுண்டு பண்ண ஆதாரமா யிருந்த தென்பது சுவாமி களின் பிரதமாபிமதம். இவ் வெண்ணம் தம துள்ளத்தில் இடையீ டின்றி நடை யாட, ஒரு நாள் பின் வரு மாறு தமக்குள் தாமே சிந்திக்க லானார்:—கல்வி கற்ப தெதற்கு? ஜீவிப்பதற்கு முதற் காரண மான பொரு ளீட்டலின் பொருட்டா?; வாதாநுவா தத்தில் ஜெயம் பெறவா? அந்நியாது அபிமதத்தை ஊர்ஜிதப்படுத்த, அல் லது மறுக்கவா? யாவரும் ஆச்சரிய முறு மாறு பிரசங்கிக்கவா? இவற்றி லெதுவேனும் ஆத்மோஜ்ஜீவநத்திற் கருக மாமா?

"எழுதரிது முன்ன மெழுதியபின் னத்தைப்,
பழுதறவா சிப்பரிது பண்பா—முழுதமதைக்,
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்,
நிற்பரிது தானந்நி லை."

என்னும் அருமைக ளனைத்தும் எளிமை யாய் ஜீவ காருண்ய மேலிட்டு உறுதி பெறுதற் கல்லவா? ஆதலால், ஆத்மார்த்த மான நூல்களை நமது சுய பாஷையிலேயே அறிந்து கொள்வது மிக்க நல மாம். இப் பாஷையின் பெயரே இனிமை என்னும் பொருளில் இருக்கின்றது. இதனது ப்ரவர்த்தக ரான முன்னோர், இதன்பாற் றூங் கண்ட இனிமையாலோ, அல்லது, இது மிருத மில்லா திருத்த லாலோ, இதற்கு அமிர்த மென்னும் ஆரியத்தின் திரி பான தமிழ் என்னு மபிதாநத்தை யிட்டனர். வட மொழிக் கெதிர்த் தட்டான இத் தென் மொழிக்கு அகஸ்தியம், திராவிடம் என்னும் பரியாயப்

பெயரு முண்டு. இவ் விரு சொற்கும் நுதற்கண் விழி யேந்து முதற் பெருங் கடவுளே காரண ரன்றே? இப் புங்கவர் பெருமான் தானு மோ ரங்கத்தினரா யிருந்து சங்கப் புலவரோ டரும் பெரு நூல்க ளாய்ந்து சந்தோஷிக்கப் பெற்ற மங்கள காத்தை மரீஇயது இதல்லவா? இதன் பிரயோகத்தால் விளைந்த அற்புதங்களுக் களவேது? சமய குரவ ரான சம்பந்தர் அப்பர் சுந்தரரே இவ் வற்புதங் கட்குச் சான் றன்றோ? தோயத்திட்ட ஏ டெதிர்ந்து சென்றதும், தீயி லிட்ட ஏடு செழித் திருந்ததும், வெந்த அங்கம் உருக் கொண் டெழுந்ததும், சந்த வாண் பனை பெண் பனை யானதும், நஞ் சமுதானதும், நாகம் பணிந்ததும், கதவந் திறந்ததும், கடலிற் கல் மிதந்ததும், உண்ட பாலனை ஒரு கராத் தந்ததும், தொண்டர் நாதனைத் தூது விடுத்ததும், செங் கல் உயர் தாத் தங்க மானதும், வங்க மா நதி வழி விட்டு நின்றதும், மற்றும், இவை யொத்த பற் பல மகத்துவங்களும் தீந் தமிழ்ச் சொல்லாற் போந்தனவே யன்றி மறு புலச் சொற்களா லன்றே? இன்ன சீர்த்திய தமிழ் மாது முன்னையோர் பொதியப் பொருப்பிடைப் பிறந்து, தென்னவன் புகழிற் கண் கிடந்து, சங்கப் பலகையிற் றங்கி யிருந்து, வையை யாற்றில் மகிழ்ந்து தவழ்ந்து, பேதைப் பருவ முற்றுப், பெருங் கனல்வாய் நின்று, சமயாசாரியர் நினைவில் நடந்து, தாரதல மங்கையின் பரா வரு மருங்கில் வளர்ந்தனள். தற் போது தென் மலையிற் சிரஞ் சாய்த்து, திரு வேங் கட மெனும் பொன் மலை வரையில் தாள் பரப்பி, மேற் றிசையில் வீழ்த்தக் கருதிய இடக் கையை இடையில் வைத்து, வலக் கையை இலங்கை பரியந்தஞ் செலுத்தி, சங்கப் புலவர் தங்கித் தழைத்த துங்கக் கூடலாற் பொங்கி யொளிருஞ் சென்னைக் கெதிரே திரு முகங் காட்டிக் கண் வளர்கின்றனள். இனி என்ன மேன்மை யுறுவளோ? இவ் வரிய தமிழின் பெரிய கலைகளை, உரிய மதுடன் தெரிய ஆர்த்தி கொண்டனன். என் கருத்திற் கிணங்கித் திருத்தி யாட் கொள்ள வல்ல குரு மூர்த்தியைக் கோவிலூரில் காண்பேன்" என்று திடங் கொண்டு, விசுவாவசு

வருஷம், வைகாசி மாதத்தில் அத் (கோவி லூர்) திருப் பதிக்குச் செல்வா ராயினர்.

சேவி லூர்தருஞ் சேவகன் றிருப்புக ழென்று,
நாவி லூர்தரப் பெறுந்திரு ஞாநியர் நவிலுங்,
கோவி லூர்மகத் துவந்தனைக் கோதறக் கூறித்,
தாவி லூர்தரு மின்பவெள் ளந்தனைச் சார்வாம்.

கோவிலூ ரென்னும் சமிவந க்ஷேத்திரத்தின் மான்மிய மானது ஸ்காந்த புராணத்துள், முதலாவ தான சநற் குமார சங்கிதையில், க்ஷேத்திர காண்டத்தில், விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. சூத மகாரிஷி நைமிசாரண்ய வாசிக ளான ரிஷிகளுக்கு அருளிச் செய்தது. இங்கு இம் மான்மியத்தை ஒரு வாறு சுருக்கிப் பேசு வாம்.

கழநி வாச லென்றும், சாலி வாடி புர மென்றும், வந்நி வந மென்றும், ஸ்ரீ வல்லப மென்றும் பிரசித்த மான சிவ க்ஷேத்திர மாகிய இக் கோவி லூர், அல்லது, சமிவநம், திரு வானைக் கா வென் னுந் திருத் தலத்திற்குத் தக்ஷிண பாகத்தில் ஐந்து யோசனை தூரத் தும், திரு மெய்யம், அல்லது, சத்திய கிரி என்னும் ஸ்தலத்திற்கு தக்ஷிண பாகத்தில் ஒரு யோசனை தூரத்தும், கண்ட தேவி, அல் லது, சொர்ண வருஷேசுவரர் க்ஷேத்திரத்திற்கு உத்தர திக்கில் அரை யோசனை தூரத்தும், திருப் பெருந் துறைக்கு மேற்குத் திசையில் ஒன் றரை யோசனை தூரத்தும், திருப் புத் தூருக்குக் கிழக்குத் திக்கில் முக்கால் யோசனை தூரத்தும் உள்ளது. சர்வ சக்திமா னாய், சர்வாத்மக ராய், திரி வித பரிச்சேத சூநிய ராய், சந்திர சேகராதி சிந்ந முள்ள திவ்ய மங்கள மூர்த்திக ராய், திரு நெல்லை நாயகிக்கு நாத ராய் உள்ள ஸ்ரீ இராச கட்க பரமேசுவரர், அடியார்களின் சர்வ பாவங்களையும் நிவிர்த்தித்து, சர்வாபீஷ்டங் களையும் கொடுக்கு மாறு, இத் திவ்ய க்ஷேத்திரத்தில் திருக் கோயில் கொண்டிருக்கின்றனர். ஆதலால், இத் தலத்தின் நாம தேயத்தை நினைத்த மாத்திரத்தில் சகல பாவங்களும் தீயி விட்ட மெழுகாய்ப்

போம். ஸகல க்ஷேத்திரங்களுக்கும் உத்தமோத்தமா யுள்ளது இது வாம். ஜீவ கோடிகளின் சமஸ்த பஞ்ச மா பாதகங்களையும் போக்க வல்லது. மது புட் கரணி என்னும் சிறந்த தீர்த்தத்தோடே கூடியது. நாநா வித மிருக பட்சி விருக்ஷ சாலங்களுடனும், நாநா வித மலர்ச் சோலை, மலர்ப் பொய்கைகளுடனும் விளங்குவது. சிவ பக்தி பர ரான வாலகில்லிய ரென்னும் ரிஷிகளாலும், சூரியக் கிரியின் தேஜசுக்கு நிக ரான தேஜசை யுடைய சந்நியாசிகளாலும், சேவிக்கப் பெற்று, வேத வித்துக்க ளான அந்தணர்க ளுடைய வேத கோஷத்தோடுங் கூடியது. சிவ நேசர்களுக்கு அத்யந்த யோக்ய மானது. சிவ பாரம்யத்திலும், சிவ புண்யத்திலும், விமுக ரானார்க்கு ஒரு போதும் அடைதற் கரியது.

உ. கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்

இங் கெழுந் தருளிய சிவ பரஞ் சுடர்க்குத் திரி புவநேசுவர ரென்றும், இராச கட்க பரமேசுவர ரென்றும் நாம மாம். இப் பரமேசனைத் தரிசிக்கப் பெற்றவர் சகல போகமுங் கைவரப் பெற்றவ ராவர். முடிவில் சிவ சாயுஜ்யத்தையு மடைவர். அசக்தர்களுக்கு, இக் கலி காலத்தில் அநுகூல மாகும் பொருட்டு, சிவ பெருமானது திவ்யாக்ஞையை மேற்கொண்டு வியாச பகவான், ஏக மா யிருந்த வேதத்தை நான் காக்கினர். இவ் வேதங்களைக் கைப் பற்றி வந்த சைமிநி முநிவர், அவைகட்கு கர்ம பரத்வஞ் செய்து, பலன் காணா ராய், அகஸ்தியரைக் கிட்ட, அவர் சைமிநி ரிஷியை நோக்கி, "கருமிகள் கரும வசத்தால் பிரம லோக பரியந்த மான புண்ணிய லோகத்தை அடைந்து, புந ராவிர்த்தியை யடைவார்கள். அகண்ட பரிபூரண பரம சிவ சொரூப நிஷ்டாபர ரான ஞாநிகள், புந ராவிர்த்தியை யடைய மாட்டார்கள். நீர் கருமத்தைச் சிவார்ப் பண மாகச் செய்யாமையால் பலன் காண வில்லை. சமீவநத் துள்ள மது புட்கரணி தீரத்தில் மதுப் பிரியருக்கு இந்தப் பரசிவ சொரூப ஞாநம் பிரம தேவனால் உபதேசிக்கப்பட்டது. இதை நாம் பூர்வம் வீர பாண்டிய மகா ராஜனுக்கு உபதேசித்தோம். அவன் சமீவநத் திற்கு தென் றிசையி லிரண்டு யோசனை தூரத் துள்ள காளையார்

கோயில், அல்லது, காளிய புர மென்னும் க்ஷேத்திரத் திருந்து பராக்கிரம சாலி யாய்ச், சிவ பக்தியிற் சிரேஷ்டனாய் விளங்கியவன்; கையில் (இராச) கட்கம் என்னும் சிறந்த ஆயுதத்தை எப்போதும் வைத் திருப்பவன்; சிவ பிரான் இவனைச் சோதிக்கு மாறு, புலி யுடன் வாத மிட்டு வரும் பிராமணனைப் போல வேடம் பூண்டு, இவன் வேட்டை யாடச் சென்று, வநத்தி லோர் விருட்சத்தி னடியில் கட்கத்துடன் தனித்து வீற் றிருந்த இவனைக் கிட்டி, புலியும் பிராமணனுந் தத் தமது குறையை முறையிடுவது போற் காட்ட, அரசன் அச் சமயத்தில் தனது அருகே யிருந்த கட்கத் தைக் காணாதவருந்தித் தைரியத்தை விடாதுகுறையாளரின் முறை யைப் பரிகரிக்கத் தனது தேகத்தைத் துரும் பாக மதித்துப் புலிக் கிரையிடத் துணிந்த போது, பெருமான் மறைந் தருளினன். பின் னர் அரசனைத் தேடி வந்த பரிசநங்கள் அவனை வந்நி வநத்தே கண்டு, ஒரு சோலையில், வந்நி விருக்ஷத்தி னருகில், ஒரு மகா லிங்கத் தையும், அந்த லிங்கத்தின் பக்கத்தில் இராச கட்கமு மிருக்கக் கண் டதை யறிவிக்க, அரசனுக்கு ஞாநம் பிறந்து சிவ பெருமானைப் பல வாறு துதிக்கப், பெருமான் பிரசந்ந ராய், அரசனது அபீஷ் டத்தை நிறைவேற்றினார். வீர பாண்டியன் (இராச) கட்கத்தை சுவாமியின் பக்கல் அடைந்ததனால், வந்நி வநப் பெருமானுக்கு இராச கட்க பரமேசுவரர் என்னுந் திரு நாம முண்டாயிற்று. இவ் விர்த்தாந்தத்தைப் பிரம தேவனா லுணர்ந்த மதுப் பிரியர், நீல கண்டரை மந தாரத் துதித்து, அவரது சேவை பெற் றுய்ந்தனர். இந்த மதுப் பிரியரால், சமி வநத் துள்ள நதிக்கு மது நதி என்றும், புஷ்கரணிக்கு மது புட்கரணி என்றும், பரமேசுவரருக்குத் திரி புவநேசுவ ரென்றும், அம்பிகையாருக்கு திரி புவநேசுவரி என் றும் பெய ருண்டாயிற்று. இத் தலத்துப் பரமேசனது திரு வரு ளாலே சுவேத மகா ராஜன் என்பவனும் பேறு பெற்றான். சுதர்மை என்னும் ஒரு வணிகனது பாரியை, தேவி பக்தியிற் சிறந்து விளங் கினள். சாலிப் (நெற்) பயிரைக் காத்து வந்த அவளது புத்திரி

இரத்ிந வல்லிக்கு நாள் தோறும் அந்ந மெடுத்துச் செல்லும் சுதர்மை, ஒரு நாள் புலத்தை விட்டுத் தன் புத்திரி, புட்பங் கொய்ய ஒரு சோலையின்கண் போயிருந்த சமயத்தில், அந்நங் கொண்டு வர, அப்போது திரிபுவநேசுவரி அன்புடன் இரத்நவல்லி போல வேடம் பூண்டு வந்து, புலத் திருந்து சுதர்மை யிட்ட அந்நத்தை யுட்கொண்டு மறைந்தனள். இச் சம்பவத்தைப் பின்ன ருணர்ந்த சுதர்மை, தேவி விஷயத்தில் பக்தி மேலிட்டுப் பாவ, தேவி பிரசந்ந மாய், வேண்டும் வரந் தந்து அந்தர்த் தாந மாயினள். சாலி(நெற்)ப் பயிரைக் காத்த படியால், தேவிக்குச் சாலி வாடீசுவரி என்னும் நாமம் விளங்கியது. சூர தன்ம னென்னும் அரசனது சாபத்தையும், வீர சேன னென்னும் மன்னனது சாபத்தையும் போக்கினமையின் மது புட்கரணி என்னும் தீர்த்தத்திற்குச் சாப விமோசந தீர்த்தம் என்னும் பெய ருண்டாயிற்று" என்றனர். இவ் வரலாற்றைக் கேட்டுச் சைமினி முநிவரும் உஜ்ஜீவந மடைந்தார். இப்படி, மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றிலும் ஒப்பற்று விளங்கும் கோவிலூரின் பிரபாவத்தை ஸ்காந்த புராணத்துள் பரக்கக் காண லாம்.

இன்னும், கோவி லூரில் உள்ள, ஸ்ரீ முக்தி ராம லிங்க ஞாந தேசிக ஸ்வாமிகளின் சிவ லிங்க ரூப அதிஷ்டாநத் தினையும், துற வாண்டவர் என்னும் ஸ்ரீ அருணசல ஞாந தேசிக ஸ்வாமிகளின் நந்தி ரூப அதிஷ்டாநத்தினையும், கருணா நிதி என்னும் ஸ்ரீ சிதம்பர ஞாந தேசிக ஸ்வாமிகளின் பல பீட ரூப அதிஷ்டாநத்தினையும், பிரஹ்ம சபை என்னும் பிரஹ்ம விசார சபையினையும், மடத்தினையும், ஆங்கு ஜீவ காருண்யம் - ஈசுவர பக்தி - பாச வைராக்யம் - பிரஹ்ம ஞாநம் என்னும் நான்கும் ஓர் உரு வாக எழுந்தருளி யிருக்கும் பிரஹ்ம வித் தான அள விறந்த சாதுக்களையும், நாள் தோறும் எந் நேரமும் இடையீ டின்றி நடந்து வரும் அந்ந தாநத்தினையும், சிவாலய கைங்கரியத்தினையும், வேதாந்த விசாரத்தினையும், நதி குளம் பூங்கா முதலியவற்றினையும், நேரில் பார்க்கும் ஒருவர் மநம்

எங்ஙனம் இருக்கும் என்பதை நான் நாவினல் சொல்லும் தர மன்று. நேரில் கண்ணல் பார்த் தநுபவித்தவர்களுக்குத் தான் அந்த ஆநந்தம் தோன்றும். ஏனெனில், கோவி லூரில் உள்ள சிட்டாசாரம் போன்று பூ உலகில் எங்கணும் இல்லை என்று நன் ருகவே கூறிவிடலாம். இவ் வற்புதத்தைக் கண் ணுற்ற சிருங்க கிரி - ஜகத் குரு - ஸ்ரீ சச்சிதா நந்த சிவ அபிநவ நாசிம்ம பாரதி ஸ்வாமிக ளவர்களே, ஆச்சரியப் படுவார்க ளாயின், வேறு உவமை சொல்வதற்கு எங் கிருக்கின்றது. கோவி லூர் போய்ப் பார்த்த மாத்திரத்தில், எப்படிப் பட்டவருக்கும், விடுதலிலும், வீட்டிலும், விருப்பம் விரைவில் உண்டாகும். இதன் பெருமை ஆயிர நா வுடைய ஆதி சேஷனே அறைய அருகர்.

இன்ன மகத்துவம் வாய்ந்த இப் பதிக்கு நமது சுவாமிகள் வந் ததும், "ஐந்தபே ரறிவுங் கண்களே கொள்ள" என்ற படி ஸ்தல விசேஷத்தாலும், நமது சுவாமிகளுக்குள்ள பக்தி விசேஷத்தாலும், ஒற்றுமை புண்டாய், தாம் எது கருதி அங் கெய்தினரோ, அது முற்று மாறு பரமேசுவரனைத் தியாநித்தனர். சில திநங்களுக்குள் அங் குள்ளா ருடைய சகாயத்தால் தக்க ஞாநாசிரியர் இன்னு ரென் ெருருவரைத் தேர்ந்து அவருடைய கருணைக்குப் பாத்திர ராகும் உபாயத்தைக் கைப்பற்றுவா ராயினர்.

---

## 7. ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிகரைக் குரு வாக அடைந்து வழிபடல்.

தமக் குரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று விரக்தி பூண்ட மகான்களின் மகிமையே, உலகிற் காணும் மேலான பொருள்கள் எல்லாவற்றுள்ளும் மேலான தென்று நூல்கள் உத்கோஷிக்கின் றன. ஏனெனில், அவர்கள் உண்மை யறிந்து உலகத்தைத் தமது வசங் கொண் டுண்மையின், ராக த்வேஷங்களுக்குக் காரண மாகிய மாநத்தை,

"கெடுக்க வல்லதங் கெட்டவர் தங்களை,
எடுக்க வல்லது மிம்மந மென்றதை,
அடக்க வல்லவ னையப வக்கடல்,
கடக்க வல்லவ ளுகுங்க டிதரோ."
(பிரபு லிங்க லீலை 18. சாதக அங்க கதி கவி 15.)

என்றபடி அடக்கி யாளுந் திறமை வாய்ந்தவர்கள்.

"அந்தமற் றொன்றாய் விகற்பமற் றறிவா யழிவிலாப் பரம் பொரு ளிருக்கப், பந்தமுற் றவரார் முத்திபெற் றவரார் பாவனை விகற்பமே யனைத்துஞ், சிந்தனை விரிவு பந்தமா மதனைத் தீர்ந் திடன் முத்தியா மநத்தின், தொந்தலீ லையினுற் றாரமா மணித்துர் தூரமு மண்ணிதாய்த் தோன்றும்" (ஞாந வாசிட்டம்-3 உற்பத்திப் பிரகாணம் 8-வது சித்த (சாம்ப ரிக)ன் கதை கவி 2)

என்பதை யுணர்ந்து, தக்க சாதநத்தால் மேல் நிலை யுற்றவர்கள். சர்வ தேச, சர்வ கால, சர்வ அவஸ்தைகளிலும் சலியாத நாட்ட முடையவர்கள். இங்ஙனஞ் சீவந் முத்தி நிலை யெய்தினவரே, சற் குருவாதற் குரிய ராவர். எவ் வுயிர்க்குஞ் செந் தண்மை பூண் டொழுக வல்ல பரிசு, இவரிடத்திற்றான் குடிகொண் டிருக்கின்றது.

"கன்னனைப் போற்றன்னை யறிவனே காக்கையுடன்,
மன்னுகு யில்போன வாறுபோ—லந்நியமாய்ப்,
பேசாது போனது றவிபி றப்பறுப்பார்க்,
காசானு மென்றேய றி."

என்பது பொய்யா மொழி யன்றோ? உலகம் துக்க மய மென்பது கண்கூ டன்று? சர்வ துக்க நிவிர்த்தியையும், பரமாநந்தப் பிராப் தியையும் பெற விரும்புவோர், வேதாந்த விசாரம் செய்தல் வேண்டும். அவ் விசார மற்றவர்க்கு, மநத் தெளி வெங்ஙன முண்டாம்?

"தோன்றி விளங்கும் பொருளெல்லாந் தொல்வே தாந்த விசாரணை
ஊன்றி நோக்கி யநுதிநமும் யூக மதனிற் பரிசயித்தால், [யில்,

தோன்றி விளங்கு மறிவொன்றே சொன்மாத் திரமாய் விடுமுலகம்,
ஊன்றி நோக்கா தவர்கட்கே யுளது போலத் தோன்றிவிடும்."

என்று கூறி யிருப்பது வேதாந்த விசாரத்தினால் விளையும் பயனையும், அஃ தின்மையால் வருங் கேட்டையு, நன்கு விளக்க வில்லையா? இவற்றை யெல்லாங் கூர்ந்து நோக்கி, நமது சுவாமிகள், "நம்மைத் தேற்ற வல்ல சற் குரு, இப் பதிக்கண் எழுந்தருளி யுள்ள ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிகரே" என்று திடங் கொண்டு, அவருக்கே,

"வேட்கைவி டுநெறி வேதாந்த மாதலால்,
வாழ்க்கைப்பு லன்வழி மாற்றிச்சித் தாந்தத்து,
வேட்கைவி டுமிக்க வேதாந்தி பாதமே,
தாழ்க்குந்த லையினேன் சற்சீட ளுகுமே."

(திரு மந்திரம் 8-வது தந்திரம் 14-வது பக்குவன் (13) 1702 கவி.) என்ற படி "நாம் சீட னுதல் வேண்டும்" என்று அவரைச் சரண் புகுந்து,

"நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்,
தென்க டம்பைத்தி ருக்கரக் கோயிலான்,
தன்க டனடி யேனையுந் தாங்குதல்,
என்க டன்பணி செய்துகி டப்பதே." (திரு நாவுக் கரசு சுவாமிகள்—திருக் கடம்பூர் கவி 9.) என்னுமாறு, அவர் திருவடிகளில்,

"வலஞ் செய்து கண்டதனை மானவிதி முறை தழுவத், தலந்தன்னிற் பணிந்தெழுகத் தலைகாமற் றிருகன்னந், தலங்கமுக வாய்புயங்க ளெனுமெட்டுந் தோயமயி, ரிலங்கு சிரங் காமுளந்தா ளெனுமைந்து மிலங்குறவே" என்று நாத் தழும்பேறத் துதித்து, விழுந்து நமஸ்கரித்து, அவரது திரு வருளை நோக்கி நின்றனர். சிவ நேசச் செல்வ ராயும், ஜிதேந்திரிய ராயும், வேத புராணுதி கலைகளின் சாராம்ஸத்தை யறிந்தவ ராயும், உலகோற்பத்தி திதி லயங்களுக்குக் காரணுத்மக ராய்ச், சத்திய

ஞானாநந்த சொரூபமா யுள்ள, பிரத்திய கபிந்ந மான பரசிவமே தானென் றநுபவிக்குஞ் சுவாநுபூதிச் செல்வ ராய் எழுந்தருளிய, ஸ்ரீ வீர சேகர ஞான தேசிக சுவாமிகள், தமக் கியல்பா யுள்ள பரம காருண்யத்தால், நமது சுவாமிகளின் திரு முகத்தைப் பார்த்து, "அகத்தி னழகு முகத்திற் றெரியும்" என்பது போல, "இவன் பக்குவ சாலி; இவனை நாம் ஆசரித்தல் வேண்டும்" என் றருள் சுரந்து, ஆசி யளித் தமரச் செய்து, விதிப்படி மந்த்ரோப தேசம் புரிந்து, வேதாந்த சாஸ்திரங்களைப் போதித்து வர லாயி னார்கள்.

இவ் வாறு, ஸ்ரீ வீர சேகர ஞான தேசிக ஸ்வாமிகளைச் சரண கதி யாக அடைந்து, மூன்று மாதம் வரைக் கோவி லூரில் வசித்துக் கொண் டிருக்கும் போது, தேனி பட்டி அண்ணாமலை ஞான தேசிக ஸ்வாமிகள், காசி யாத்திரை போய் வருவ தாக உத்தேசித்து, தமக்கு வழிப் பிரயாணத்தில், பேசுவதற்கு ஹிந்தி பாஷை தெரியாமை யால், ஹிந்தி பாஷை தெரிந்த நமது சுவாமிகளைக், குரு மூர்த்தியி னிடத்தில் அநுமதி பெற்று அழைத்துக் கொண்டு, இராமேசுவர முதல், இடையில் உள்ள பல க்ஷேத்திரங்களும் சென்று, தெரிசித் துக் கொண்டு, காசி க்ஷேத்திரம் போய்ச் சேர்ந்தனர். பின், ஸ்ரீ அண்ணமலை ஞான தேசிக ஸ்வாமிகள் அங்கு சில காலம் வாசமா யிருக்க, நமது சுவாமிகள் மாத்திரம் காசியி லிருந்து திரும்பி வந்து சிதம்பரத்தில், ஸ்ரீ பொன்னம்பல ஞான தேசிக ஸ்வாமிகள் மடத்தில், ஆறு மாதம் தங்கி யிருந்து, ஸ்ரீ நட ராஜப் பெரு மான் தெரிசநம் பிரதி தினமும் செய்து, பின்னர், கோவி லூருக்கு வந்து, குரு மூர்த்திகளின் ஆஞ்ஞைப்படி சாதந சதுட்டயங்களைச் சம்பாதித்துக் கொண்டும், வேதாந்த சாஸ்திரங்களை மநநஞ் செய்து கொண்டும், ஆத்தம் அங்கம் ஸ்தாநம் சத்பாவம் ஆகிய நான்கு வித பணிகளையும் செய்து கொண்டும், வந்தனர். பின், தக்ஷிணா மூர்த்தி ஸ்வரூப மாக விளங்கும், ஸ்ரீ வீர சேகர ஞான தேசிக ஸ்வாமிகளின் சந் நதியில், நமது சுவாமிகளும், 1. நாநா ஜீவ வாதக் கட்டளை,

2. கீதா சாரத் தாலாட்டு, 3. சசி வந்ந போதம், 4. மகா ராஜா துறவு, 5. வேதாந்த சூடா மணி முதலிய தமிழ்ச் சாஸ்திரங்களை அதி சிரத்தை யுடன் கற்று, அவற்றில் வல்லவ ராய், அறிந்த வண்ணம் ஒழுகி வந்து, அநித்திய மாகிய உலக வாழ்வில், விரக்தி யடைந் திருந்தனர். பின்னர், குரு சுவாமிகளின் அநுமதி பெற்று, தக்ஷிணத் துள்ள அநேக புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்தி ரார்த்த மாய்ப் புறப்பட்டுச் சென்று,

"அகனமர்ந்த அன்பினரா யறுபகைசெற் றைம்புலனு மடக்கி ஞானப், புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்"

ஆன, பரமேச்சுரரைக் கண் ணாரக் கண்டு, வா யார வாழ்த் தித், தற் போதம் நீங்கிக், காமம், வெகுளி, கடும் பற் றுள்ளம், மாநம், உவகை, மத மெனு மாறையும் போக்கி, எழுந் தெழுந்து சீறுஞ் சுபாவத்தை யுடைய இந்திரியப் பாம்புகளை, வஸ்து விசார மாகிற தண்டங் கொண்டு தாக்கி யடக்கித், தத்துவ ஞானத்தைப் புகலிட மாக் கொண்டு திரும்ப லுற்றனர். அக்கால், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில், வித்வான் பிரம்ம ஸ்ரீ திரு. நாராயணையங்கா ரவர்களைச் சார்ந்து, அவர்க ளிடம், நன் னூல், காண்டிகை, விருத்தி யுரை முதலிய இலக்கணங்களையும், தர்க்க சங்கிரகம் முதலிய தர்க்க நூல்களையும் கற் றுணர்ந்தனர்.

அநந்தரம், தமது குரு சுவாமிகளின் சந்நிதாநத்திலேயே யிருந்து, குற் றேவல் புரிந்து வந்தனர். இவரது பக்குவத்தை யும், சீலத்தையும், புத்தி நுட்பத்தையும் கண்ட குரு சுவாமிகள், இவர் விஷயத்தில் மிக்க அன்பு கொண் டிருந்தனர். அப் போது நமது சுவாமிகள் காசி யாத்திரையிற் காத லுற்றனர். வட மொழி கற் றுணரவும் அவா மிகுந் திருந்தனர்.

இல் லற வாழ்வில், நமது சுவாமிகளுக் குள்ள நிராசையைக் குரு சுவாமிகள் உய்த் துணர்ந்து, சந்நியாசம் அளிக்கச் சித்த மாயினர்.

---

# 8. துறவு. (சந்நியாசம்)

நாம் அரிதிற் பெற்ற உடம்பானது நல்ல நிலையில் உள்ள பொழுதே, அவ் வுடம்பாற் பெறற் பால தாய, பெரும் பயனைப் பெறுதல் வேண்டு மென்பர் பெரியோர். நீர்க் குமிழி போலும், வான் மின்னற் போலும், நிலையாமை வாய்ந்த உடம்பு, பல் பிணிக் குறையுளா யிருத்தலின், அது கொண் டடையும் பயனை, அது நன் னிலைக்க ணுள்ள பருவத்தே யன்றி, அடைவது கூடா தன்றே? தாடகையைக் கொல்லு மாறு விசுவாமித்திர மகரிஷி, ஸ்ரீ ராம பிரானுக்குக் கட்டளை யிட்ட போது, ராமர், இவள் பெண்பா லாயிற்றே என்று மயங்க, மகரிஷி அவரை நோக்கி,

"தீதென் றுள்ளன யாவையுஞ் செய்தெமைக்,
கோதென் றுண்டில ளித்தனை யேகுறை,
யாதென் றெண்ணுவ திக்கொடி யாளையும்,
மாதென் றெண்ணுதி யோமணிப் பூணினாய்."

(கம்ப ராமாயணம் பால காண்டம் தாடகை வதைப் படலம் கவி 56)

என்று கூறினர். இதில், 'எமைக் கோதென் றுண்டிலள்' என்னும் வாக்கியத்தைச் சீர் தூக்கி நோக்கு மிடத்து, ஊன் பெருகுதலிற் பெரிதும் கண் ணோக்க முள்ள ஜீவ ராசிக ளனைத்தையும் உட் கொண்டு தாடகை யானவள், என்னையும், என் போன்ற ரிஷி கணங்களையும் பட்சிக்காது விட்டதற்குக் காரணம், எங்கள் தேகம் சத் தின்றிக் கோதா யிருத்தலே யாம் என்று புலப்படுகின்றது. அதாவது, கரும்பை அதன்க ணுள்ள சத்தை யெடுத்து விட்டுச் சக்கை யளவில் விட்டது போல, உடம்பை அதனா லாதற் குரிய பய னாகிய சத்தை யாத்மார்த்த மாக்கிப், பசை யின்றி விடுத்த லாம். பசை யற்ற பதார்த்தம், பாழ் படுதலைக் குறித்துப் பரிதபிப்பா ரெவரே னு முண்டோ?

"தன்னுடல் தனக்கொன் றீந்தால் தக்கதோர் பலம தாகும்,
மன்னிய வுறவுக் கீந்தால் வருவது மயக்க மாகும்,

மின்னியல் வேசைக் கீந்தால் மெய்யிலே வியாதி யாகும்,
அன்னிய பரத்துக் கீந்தால் ஆருயிர்க் குதவி யாமே."

என்பதும், இக் கருத்தைப் பற்றியதே யா மன்றோ? ஆதலால், மாநுடப் பிறவியின் அருமை தெரிந்த விவேகிகள், நல் லுணர்வு, நடை யாடப் பெற்ற ஞான்றே, உடல் பொருள் ஆவி என்னும் மூன்றினையும் குரு மூர்த்தமா யெழுந் தருளி ஆட் கொள்ள வந்த பரமாத்மாவுக்கே, அர்ப்பணஞ் செய்து, அவர் அருளால் அவர் மய மாகும் அரிய நிலையையே அடைய முயலுவர். எனெனின்,

"மொய்யுற்றி டவேமு யலுந்த வத்தினன் றிப்,
பொய்யுற்ற வில்லொழுக்கம் பூண்டுவினை போக்குவது,
மெய்யுற்றி டுதகளை மிக்கபு னலிருக்கச்,
செய்யற்சின் னீரிடத்துத் தீர்க்குஞ்செ யலன்றோ."

என்னும் உண்மை வெளிப்படுதலி னென்க. பிறவிப் பெருங் கடல் நீந்த வல்லார் இவரே என்பது,

"அறிவறி ஞாகியா லன்றி வன்பவ,
மறிவுறு கருமியான் மாய்வு றாதுகாண்,
எறிகதி ரிரவிவந் தெழுந்தி டாவிடில்,
செறியிரு ளகலுமோ சித்த ராமனே."

(பிரபு லிங்க லீலை 15. மருள சங்கர தேவர் கதி கவி 11.)

என வரும் நிறை மொழியாலும் புல னாகின்றது. மெய் யுணர் வெய்தப் பெறாதவரே, இன்பம் போற் காட்டித் துன்பத்தையே மேலு மேலுந் தரத் தக்க வாழ்க்கையை இச்சித் துழல்வர். இன்ன துன்பத்தைக் கண்டும், அன்னோர் துறவு பூண முந்துவ தில்லை. மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐந் திடத் தாம் ஆசை யையும், மநத்தால் வரும் ஆசையையும், அதிக்கிரமிக்காது, காக்கும் வழியில் நின்று காத்துத், தன்னை நடத்தும் ஆற்ற லுடையவனே, வீடு பெறுதற் குரியவ னாவன். ஆகவே, புற மாகிய செல்வத்தின் கண்ணும், அக மாகிய யாக்கையின்கண்ணும், செல்வ தாகிய பற்றை, அவற்றின் நிலையாமையைக் கருதி விடுதற் குரிய ரவ்வாக்

யத்தில், வழுவாத ஊக்கத்தை யுடைய நமது சுவாமிகளுக்குச் சந்நியாசம் பொருந்திய தென்று கண்ட குரு சுவாமிகள் வேதோக்த விதிப்படி சந்நியாசம் கொடுத்து, காசிகாநந்தர் என்னும் திரு நாமத்தையுஞ் சூட்டினர். இந் நிலை யடைந்ததால், நமது சுவாமிகளுக் குண்டாகிய ஆநந்தத்திற் களவே யின்றும்.

"வேண்டி னுண் டாகத் துறக்கத் துறந்தபி, னீண்டியற் பாலப ல."

(திருக் குறள் 35-வது துற வற வியல். கவி 2.) என்ற படி,

"விருத்தனுய்க் கருத்த ழிந்து விழிகளும் பஞ்ச டைந்து,
நிருத்தனுய்க் கோல்கைக் கொண்டு நின்றுடல் நடுக்க மெய்தி,
வருத்துறு காலந் தானும் வருவதன் முன்னர் உள்ளம்,
இருத்திய சமாதி கூடி யெண்ணிலா நந்தந் துய்ப்பான்."

தக்க காலத்தே துறவு பூண்ட நமது சுவாமிகளின் தீரமே தீரம். "எரிவதைப் பிடுங்கினுல் கொதிப்ப தடங்கும்" என்னு மாறு, உள்ள பொருள்க ளனைத்தையுந் துறந்தால் விஷயாநுபவம் குறையு மன்ரு? இது மேலோருடைய கொள்கை யென்பது, அன்னேர்,

"................................—தேருங்கால்
உன்னை யொழிய வுறவில்லை யென்னுமது
தன்னை யறிவைத் தனியறிவை—முன்னர்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர் என்று—நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள் ளுவருரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்—ஐவர்க்கும்
ஆவதுவே செய்தங் கவர்வழியைத் தப்பாமற்
பாவமெனும் பௌவப் பரப்பழுந்திப்—பூவையர்தங்
கண்வலையிற் பட்டுக் கலவிக் கலைபயின்றங்
குண்மைநிலை யுணர்ச்சி யோராமல்—திண்மையினுல்
நாவிற் கொடுமை பலபிதற்றி நாடோறுஞ்
சாவிற் பிறப்பிற் றலைப்பட்டிங்—காவிநிலை
நிற்கும் வகைபாராய் நிலையான நெஞ்சமே"

என்று கூறி யுண்மையின் நன் கறிய லாகும். ஆகையால், நமது சுவாமிகள், இந்த நிலையைக் கடைப் பிடித்து, ஜீவ காருண்யத்தை மேற் கொண்டு, உரிய ஒழுக்கத்தில் ஒரு சிறிதும் பிறழாது, ஒழுகி வர லானார். இவ் வா றொழுகி வருங் காலத்தில், மீண்டும் காசி க்ஷேத்திரத்திற்குப் போய் வர வேண்டு மென்னும் எண்ணம் முன்னரே சுவாமிகளுக் குதித் திருந்தமையின், அதனை இப் போது நிறை வேற்றிக் கொள்ளுதல் வேண்டு மென்று தமது குரு சுவாமிகளுக் கறிவிக்க, அவரும், "அவ்வாறே யாகுக; அங் குள்ள சந்நியாசி சம்ஸ்கிருத பாடசாலையிற் சேர்ந்து வட நூற் பயிற்சியிலும் நன்கு தேர்ந்து வேதாந்த சாஸ்திரங்களை விபரீத சந்தேகங்க ளறத் தெளிந் துணர்ந்து வரக் கடவாய்" என்று, நாட் டரசன் கோட்டை, பஞ்சாக்ஷர அய்யா என்னும் பெரியார் முன்னிலையில், ஆசி கூறி அநுக்கிரகஞ் செய்தருளினார். சுவாமிகளும், தமது குரு சுவாமிகளின் திரு வடிகளிற், பணிந் தெழுந்து, அவ ருளை மறவாத நெஞ்சின ராய், சௌமிய வருஷம், ஐப்பசி மாதம், தீபாவளிப் பண்டிகைக்கு முதல் தினம் காசி க்ஷேத்திர யாத்திரிக ராயப் புறப்பட லானார்.

அக் கால், காரைக் குடி, தேவி கோட்டை, பலவான் குடி, கொத்த மங்கலம், கடியா பட்டி, தேனி பட்டி, ராய வரம், கோனு பட்டி, கீழச் செவ்வல் பட்டி, பனையப் பட்டி முதலிய ஊர்களில் உள்ள தந வைசியப் பிரபுக்களும், சாக்கோட்டை. கோ. ராம. வேதாந்த மடாதிபதி - ஸ்ரீ முத்துக் கறுப்ப ஞான தேசிக ஸ்வாமிகளும், காசி யாத்திரை போய் வருவதற்கு வேண்டிய பொருளை, மிகுதி யாகப் பிரியத்தோடு கொடுத் தனுப்பினார்கள். நமது சுவாமிகளின் குரு மூர்த்தியினிடத்து, முற் சரண் புகுந்த, ஸ்ரீ சுப்பய்ய ஞான தேசிக ஸ்வாமிக ளவர்களும், காசியி லிருந்து சம்ஸ்கிருதம் படிக்கும் முறைகளையும், தாம் முன் படித்த முறைகளையும் கூறியும், ஸ்ரீ வெள்ளியங்கிரிச் சுவாமிக ளவர்கள் சீக்கிரம் நன் றாகப் படித்து வரும்படியாக ஆசீர் வதித்தும் அநுப்பினார்கள்.

## 9. காசி க்ஷேத்திர ப்ரபாவமும், வட மொழிப் பயிற்சியும்.

முத்தி யளிக்க வல்ல சத்த புரியுள், காசி க்ஷேத்திர மாகிய இத் தலமே முதன்மை பெற்ற தென்ப. மகா நதிகளுள் மேன்மை வாய்ந்ததும், பகீரதப் பிரயத்தனத்தால், வா னின் றிழியப் பெற் றதும், சச்சிதாநந்த சொரூப ராகிய சாக்ஷாத் பரமசிவத்தின் திரு வருள் பெற்று, அவரது ஜடா மகுடத்தில் தங்க லுற்றதும், தன் னிற் படிந் தாடுவா ருடைய பாபங்க ளனைத்தையும் சிதைக்க வல்லது மான, கங்கா நதியின் தீரத்தி லிருந்து, ஒப் புயர் வின்றி யொளிர்தற் பாலது இத் திரு க்ஷேத்திரம். இதில், சிவ பெருமான் அன்பர்களின் துன்பங் களைந்து, அகத் துறு மபீஷ்டங்க ளனைத் தையு மளித் தருள்கின்றனர். சர்வ சங்கார காலத்தும், இத் தலம், சிவ பிரானது முத் தலைச் சூலத்தின் முடிமீ திருந்து, நாச ரஹிதமா யிருப்பது. இத் திவ்ய ஸ்தலத்தில், ஆருயி ரகலப் பெறும் ஆந்மாக் களுக்குச் சாக்ஷாத் பார்வதி தேவியார், சிரம பரிகாரஞ் செய்ய, பர சிவப் பிரபு, வலக் காதில் தாரக மந்திரத்தை யுடதேசித்து முத்தி யளிப்பர். இதில், சயிகடவியன், இயக்கர், சம்வர்த்தகர் முதலியோர் பூசித்து வந்த சிவ லிங்கங்களும், கோ பூசித்த, கோப் பிய ரேகம், கபிலாகாரம், இருஷபத் துவச லிங்கம், பத்திர தோய தீர்த்தம், இரணிய கற்பேசம், சுவலிநேச்சுரம், பர லிங்கம், கந்து கேச்சுரம், சயிலேச்சுரம், சங்கமேச்சுரம், சுத்திமேசம், சுக்கி ரேசம், சம்புகேசுரம், மல்லிகார்ச்சுநம், ஈசாநம், கணேச்சுரம், அகி லேச்சுரம், இராமேச்சுரம், கதம் பேச முதலிய ஸ்தலங்களு மூண்டு. இந்த மகா ஸ்தலம், ஐந்து குரோசம் (இரு மைல்) சிவ லிங்கங்கள் இருத்தலின், ஆநந்த காநநம் எனவும், இறந்த உயிரை அளித்த லாலும், வேதிய னெடுத்த பிடி மணலில் தோன்றிய, சிவ லிங்க மிருத்தலாலும் அவி முத்தம் எனவும், ஆந்மாக்களுக்குச் சிவாநந்த மளித்தலால், ஆநந்த காநநம் எனவும், சர்வ சங்கார காலத்தில், பூதங் கள் ஒடுங்கு மிடம் ஆதலின், மா மயாநம் எனவும், சிவ மூர்த்தி

சோதி வடி வாய் எழுந்தருளி யிருத்தலாலும், முத்தி மாதுக்கு இருப்பிட மாதலாலும், காசி எனவும், உயிர்க்குத் தருமம் அளித்த லால், தரும வரம் எனவும், பெயர் பெறும். இக் காசி க்ஷேத்திரம், பெண் வடிவ மேந்திச் சிவ பிரானைப் பணிந்து, தன்னை யடைந் தவர், முத்தி யுறு மாறு வரம் பெற்றதாகவும் கூறும். இவ் வாறு, மேம்பா டுற்ற இக் காசியில், கங்கா நதிக் கரையில் உள்ள, தீர்த்த கட்ட மாகிய மணி கர்ணிகை யொன் றுண்டு. இக் கட்டத்தி லிறக்கப் பெற்றவரும் முத்தி யடைவர். மக்க ளாய்ப் பிறந்தா ரெவரும் தமது வாழ் நாட்களுள், ஒரு முறையாவது இத் திருத் தலத்துக்கு யாத்திரை செய்து, இதனைத் தரிசித்துப், பாவந மடை தல் வேண்டும் என்று மகா புராணங்கள் முறையிடுகின்றன. இதன் பிரபாவத்தை விஸ்தரித்துச் சொல்ல ரிஷிகளே சோர் வுறின் சின் னுட் பல் பிணிச் சிற் றறிவின ராகிய நம்மா லாமோ?

பல வாற்றானும் சிறப் புற் றோங்கும் இக் காசி யம்பதிக்கு, நமது சுவாமிகள் வந்ததும், நிர்மல ராய்ச் சித்த ஸாந்தி யடைந்து, ஸ்தல முழுதுஞ் சுற்றிப் பார்த்துச், சிவப் பிரசாதம் பெற்று, வட மொழி கற்கும் ஆவல் மேற்கொண் டிருந்தனர்.

சிவாநுக்கிரகத்தால், பாணினி முனிவரது வாயி லாக வெளிப் போந்த வட மொழியும், அகத்திய முனிவரது வாயி லாக வெளி வந்த தென் மொழியும் ஆராயு மிடத்து ஒரே பிறப்பின வாம்; ஏற்றத் தாழ் வுடையன வாகா. இங்ஙு னிருந்தும் முற்பட்டது வட மொழியே என்பது,

"விடையு கந்தவன் பாணினிக் கிலக்கண மேனாள்,
வடமொ ழிக்குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்,
திடமு றுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொல்."

எனும் வழக்காலும், வேதாதி கலைகண் முற்றும் வட மொழியி லேயே, பிரமாண பூர்வக மாக நிலை பெறுதலாலும், தென் மொழிப் பிரயோகங்கள், வட மொழிப் பிரமாணத்தா லன்றிச் சிறவாமை

கண்கூடா விருத்தலாலும், இனிது புலனும். அன்றியும், சிவ பெருமானது பாணிக் கிரகண மகோற்சவ காலத்தில், பல திசை களிலு மிருந்து தேவ கணங்களும், ரிஷி கணங்களும், திரண்டு வந்து கூடிய போது, பூமியின் வட புறங் கனத்துத், தென் புறமே லெழுந்தது. இதைக் கண்ட பரம சிவம், விசுவ கர்மாவைத் தென் புறம் போய்ப் பூமியைச் சம நிலை யாக்கு மாறு ஆஞ்ஞாபிக்க, அவன் பெருமானைப் பணிந்து, இத் தேவ மாதவக் கூட்டத்தி னின்றும், அவ் விடத்திற்கு யாவர் ஏகினும் பூமி சமப்படாது, சமுத்திர பானஞ் செய்த பெருந் தவத்தை யுடைய, 'அகஸ்திய முனிவர் ஒருவர் போவா ராயின், காரிய சித்தி யாம் என்றனன். அவ் வாறே, சிவ பிரான் அகஸ்திய முனிவருக்குக் கட்டளை யிட, இதற்குக் காரணம் விசுவ கர்மா என் றறிந்த கும்ப முனி, விசுவ கர்மாவை நோக்கி, "இம் மகோற்சவத்தை நான் தரிசிக்கா வாறு நீயே, என் பிரிவிற்கு முதலாளிடா யிருந்தமையின், உன் குல முழு மையும் பேதப் பட்டுச், செய்யுந் தொழில் அதிகப் பட்டு, பெறும் ஊதியம் மட்டுப் பட்டு ஒழியக் கடவது" என் றொழியாத சாபங் கொடுத்தனர். அப் போது, அவனும் கும்ப முனியைப் பார்த்து, "எல்லோருக்கும் இதத்தையே பிரேரேபித்த என்னை நீ வீணே சபித்தமையின், உன் வாயி லாக வந்த அழகிய தமிழும் வேதத் திற்குப் புறம் பான தாகிப் புதர் விடுக்கக் கடவது" என்று பிரதி சாப மிட்டனன். அநந்தரம், அகஸ்திய முனிவரது பிரார்த்தனை யால், தமி ழானது வட மொழியினும், மேம்பா டுற்ற தென்ப. இத் தகைய சாபம் வட மொழிக் கின்மையால், இதுவும் வட மொழியின் ஏற்றத்தை வலியுறுத்தி நிற்கு மென்க.

இவ் வண்ணம், மேன்மை வாய்ந்த இவ் வட மொழியை வரன் முறையா யுணர்ந்து வல்லுந ராக வேண்டு மென்று, நமது சுவா மிகள் காசி யம்பதியில், தரும வாளரின் பொருட்டு ஸ்தாபக மா யுள்ள சமஸ்கிருத பாட சாலையில் தாமு மொரு மாணவ ராகச் சேர்ந்து பயின்று வர லானார். இச் சாலையில், நமது சுவாமிகளுக்குப் போத காசிரிய ராய் வாய்க்கப் பெற்றவர், ஸ்ரீமத் அச்சுதாநந்த பண்டித

ராம். இவரோ உலகப் பிரசித்தி பெற்ற ஸ்ரீமத் சிவ குமார மிசிர பண்டிதரின் சிஷியர். வட மொழி நூல்கண் முற்றும் கைவரப் பெற்றவர்; தமக் கிணை யில்லை யென்னும் புகழைப் பெற்றவர். இன் னுரிடம் நமது சுவாமிகள் வேதாந்த சாஸ்திரங்களைக் கற்று வந்தனர். பாட சாலையில் பயின்று வந்ததுடன், தம திருப்பிடத் தும், நமது சுவாமிகள், ஸ்ரீமத் அச்சுதாநந்த பண்டிதரை எழுந் தருளச் செய்து, கிரக சம்ரக்ஷணார்த்தம், அவருக்கு மாத மொன் றுக்கு ரூபாய் பத்து காணிக்கையாகச் செலுத்தி, இரண்டு வருஷ பரியந்தம் வேதாந்தக் கிரந்தங்களை ஐயந் திரி பறக் கற் றுணர்ந்து வந்தார். இதுவு மல்லாமல், தேவி பிரசாத கவி என்னும் நாம தேயத்துடன் தற்காலம் தமக்கு ஒப் புயர் வாரு ஒருவரு மில ரென்று பிரசித்தி வாய்ந்த புலவரிடத்தும், பொருந்தி யிருந்து, பூர்வ மீமாம்ஸை யோக சாஸ்திர முதலிய அருமையான நூல்களையும், ஸ்ரீ நித்தியாநந்தர் முதலிய பல் வேறு பண்டிதர்களிடம் தர்க்க சாஸ்திரம், வேதாந்த சாஸ்திரம், வியாகரணம், முதலியவற்றையும் அறிந்துவர லானுர்.

சர்வ துக்க நிவிர்த்தியும், பரமாநந்தப் பிராப்தியு மடைய விரும்புவோரை மே னிலை யாள ரென் றுலகம் புகல்கின்றமையால், இவற்றை யடைவதற்கு வேதாந்த விசாரமே, யின்றி யமையாத தொன்றாம். ஆதலின், நமது சுவாமிகள், வேதாந்த சாஸ்திரங் களில் வல்லவ ராய், அவை கூறும் வண்ணம் நின் றெழுகும் வைராக்கிய புருட ராய், அறிய வேண்டியதை யறிந்து, அடக்க வேண்டியதை யடக்கி, யாவரும் புகழு மாறு பிரசித்தி யுற்றனர். விரோதி கிருது வருஷம் வைகாசி மாதம், தமது * குரு மூர்த்தி கள், விதேக கைவல்ய மடைந்ததற்குக் காசிப் பதியினின்று வந்து, மீண்டும் காசிப்பதியை யடைந்தனர். பின்னர், ஆநந்த வருஷம் கார்த்திகை மாதம் காசி யம்பதியை விட்டு, அங் குள்ள குரு மூர்த்திகள் முதலானோருடைய அநுமதி பெற்றுத், தமது சுதேசம் வந்து சேர லாயினர்.

---

* இதன் விரிவைப் பின் 10-வது அத்தியாயத்தில் கூறுவாம்.

நமது சுவாமிகள், காசி க்ஷேத்திரத்தில் வாசஞ் செய்து வந்த போது, புண்ணியோத்தமர் சிலர், அவருடைய போஜநாதி சௌகரிய நிமித்தம், அவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஐம்பது வீதம் உதவி வந்தனர். இவ் வுதவி, சுமார் ஐந்து வருஷம் நடை பெற்று வந்தது. இதன் மொத்தம் ரூபாய் மூவாயிரத்துக்கு மேலாகும். இதன் விவரம் இத்துடன் சேர்த் துள்ள அநுபந்தத்தால் நன்கு வெளியாம்.

சுவாமிகள் காசி க்ஷேத்திரத்தி லப்பியாசிக்கப் பெற்ற வட நூல்கள் பின் வருவன வாம்.

### 1. வியா கரணம்.

1. லகு சித்தாந்த கௌமுதி 2. சித்தாந்த கௌமுதி.

### 2. தர்க்கம்.

1. நியாய காரிகாவலி
2. நியாய சித்தாந்த முக்தாவலி.
3. தின கரி
4. தர்க்க சங்கிரகம்
5. தர்க்க சங்கிரகத் தீபிகை
6. நீலகண்டி
7. பத கிருத்தியம்
8. நியாய போதினி
9. அநுமாந கண்டம் (ஜாகதீசி)

### 3. யோகம்.

1. யோக சூத்திரம்—வியாச பாஷியம்.
2. வாசஸ்பதி மிசிர வியாக்கியாநம். 3. போஜ விருத்தி.

### 4. சாங்கியம்.

1. சாங்கிய காரிகை 2. சாங்கிய தத்துவ கௌமுதி.

### 5. பூர்வ மீமாஞ்சை.

1. அர்த்த சங்கிரகம்—கௌமுதி வியாக்கியாந சகிதம்.
2. நியாயப் பிரகாசம். 3. ஜைமினீய நியாய மாலை (வியாக்கியாநம்)

### 6. (உத்தர மீமாஞ்சை) வேதாந்தம்.

1. வேதாந்த பரிபாஷை—சிகாமணி வியாக்கியாந சகிதம்.
2. பேததி காரம்—சத் கிரிலை வியாக்யாந சகிதம்.

3. பஞ்ச தசி—ராம க்ருஷ்ண பண்டிதர் வியாக்யாந சகிதம்.
4. பிரம சூத்திர-சாரீரக பாஷியம். 5. பகவத் கீதை-பாஷியம்.
6. ஈச, கேந, கட, முண்டக, பிரசந, ஐதரேய, தைத்திரீய, மாண்டூக்ய, சாந்தோக்கிய, பிருக தாரண்யக மென்னும் பத்து உபநிஷத்—சங்கர பாஷியம்.
7. தத்துவப் பிரதீபிகை (சித் சுகி) 8. அத்வைத சித்தி
9. கண்டந கண்ட காத்தியம் 10. நைஷ்க் கர்மய சித்தி.

7. காவ்யம்.

1. கிராதார்ஜுநீயம். 2. ரகு வம்சம். 3. சங்கர திக் விஜயம்.

இத்யாதி நூல்களிலும், இவை போன்ற இன்னும் அறிதற் கரிய ஆரிய நூல்கள் யாவற்றிலும், பூரண ஞாநத்தைப் பெற்றுத், தமிழிலும், இலக்கண இலக்கியங்களால், மதுரைத், தமிழ்ச் சங்க லால், மேன்மை யுற்று, பர்மா, இந்து ஸ்தாநியும், எழுதப் படிக்கப் பேசக் கற்று,

"மேம்பொருள் போக விட்டு மெய்ம்மையே மிகவு ணர்ந்து,
ஆம்பரி சறிந்து கொண்டு ஐம்புல னகத்த டக்கிக்,
காம்பறத் தலைசி ரைத்தன் கடைத்தலை யிருந்து வாழும்."

சுவாநு பூதிச் செல்வ ராய், அருள், பொறையாதி யருங் குண பூத ராய் விளங்கும் நமது சுவாமிகளின் பிரபாவத்தை யா னெழுதப் புக்கது, "அன்பெனு நறவ மாந்தி, மூங்கை யான் புகழ லுற்ற"தை யொக்கும். பெரும் பொருள்கள் யாவற்றுள்ளும், பெரும் பொருளாய் விளங்க வல்ல பரமாத்மாவுடன் இரண்டறக் கலந்து வாழ வல்ல மகான்களே பெரியோ ராவர். அப் பெருந் தகையோரின் பிரபாவத்தைப் பேசப் படிக்கக் கேட்கப் பெறும் பாக்கியத்தை யுடையவர்க்கு எல்லா நன்மையும் பெருகு மென்று வேத புருடன் விரித் துரைப்ப ரால், இத் திவ்விய சரித்திரத்தையும் எவரும் பரவு மாறு பரமேசுவரனைத் தியாநிக்கின் றனன்.

"அரியவற்று ளெல்லா மரிதேபெ ரியாரைப்;
பேணித்த மராக்கொ ளல்." (திருக் குறள் 45-வது அதிகாரம் 3)

ஓம் தத் சத். சுபம் அஸ்து.

திருப் பூ வண மடாதிபதி - சத சாஸ்திர கர்த்தா,
ஸ்ரீ காசிகாநந்த ஞானாச்சார்ய ஸ்வாமிகள் இயற்றிய நூல்கள்

1. வேதாந்த பதார்த்த மஞ்ஜூஷா-வசநம். 2-50
2. விசார சாகரம்-வசநம் ஹிந்தி மொழி பெயர்ப்பு. 2-25
3. வியாச தாத்பரிய நிர்ணயம்-வசநம். 0-50
4. கதா சரித் சாகரம்-வசநம் கதை 'ச' மொழி பெயர்ப்பு. 2-25
5. நைஷ்க் கர்ம்ய சித்தி-வசநம். ஷை 0-50
6. வேதாந்த சித்தாந்த முக்தாவலி-வசநம். ஷை 0-50
7. வேதாந்த பரிபாஷை-வசநம். ஷை ·0-46
8. ஸ்வா ராஜ்ய சித்தி-வசநம். ஷை 0-25
9. மண்டல பிராஹ்மண உபநிஷத் ராஜ யோக பாஷ்யம். 0-25
10. ஈசாவாஸ்ய உபநிஷத் சங்கர பாஷ்யம் வசநம். ஷை 0-25
11. வேதாந்த சஞ்ஞா-வசநம். ஷை 0-13
12. ஹரிமீடே-ஹரி தத்வ முக்தாவலி-பத உரை-வசநம். 0-75
13. பகவத் கீதை-15வது அத்தியாயம், மூர்க்க சதகம, பத உரை, சம்ஸ்கிருதம், தமிழ் கவி உரை. 0-50
14. நாநா ஜீவ வாதக் கட்டளை சத்யார்த்தப் பிரகாசிகை உரை 2- 0
15. கீதா சாரத் தாலாட்டு-லகு சந்திரிகை உரை. 2- 0
16. ஷை நக்ஷத்திர விளக்க (மீன் ஒளி) பத உரை. 0-25
17. மகா ராஜத் துறவு-மநப் பிரசாதிநி உரை 2- 0
18. பக்தி (வைராக்ய) சதக-பத உரை-பொழிப் புரை. 1-50
19. சிடாசாரம்-பால போதிநி உரை. 0-50
20. வைராக்ய தீப-பத உரை-பொழிப் புரை. 0-50
21. திருவெம் பாவை-திருப் பள்ளி எழுச்சி-மணி மாலை சிறு சுடர் உரை (கவி 33) 0-75. 22. ஷை பத உரை. 0-25
23. பக்தி (வைராக்ய) சதக ஸ்தோத்திர உரை. 0-19
24. மந்திரோபதேசம் 8 மந்திரம் உரை வசநம். 0-25
25. தாந்திரிக அத்வைத சைவ கண்டநம் (சூட்டுக் கோல்-[illegible]ம்.) வசநம். 1- 0
26. திருக்[illegible]ர சேகர ஞாந தேசிக சரிதம்-வசநம். 1- 0
27. மார்கழித் திங்கள் பாராயண மஞ்சரி கவி 162. 0-50
28. ஒன்பது துறவிகள் பாடிய-திரு எம் பாவை-திருப் பள்ளி எழுச்சி என்னும் அருட் பா மாலை கவி 300. 1- 0
29. வேதாந்த சாஸ்திர ரத்நாவலி 9 நூல் சேர்ந்தது. 3- 0
30. விவேக சூடாமணி கவி670 அஞ்ஞவதைப் பரணி கவி500 1- 0
31. கைவல்ய நவநீதம் கவி 288 0-56. 32. ஈசுவர கீதை கவி 0-25
33. பகவற் கீதை கவி 545. 1-25. 34. பிரஹ்ம கீதை கவி 0-38
35. வாசிட்டம் கவி 2055 2-25. 36. பஞ்ச தசி கவி 800. 0-63